# விடுதலைப்புலிகள்

குரல் - 42 | ஆவணி - 1993 | அன்பளிப்பு : ரூபா 5/-


# சிங்கள தேசத்தை உலுக்கிய இராணுவத் தோல்விகள்

ஏறக்குறைய ஒரு மாதகாலத்தில் புலிகள் இயக்கம் படைத்த மூன்று பாரிய இராணுவச் சாதனைகளால், சிங்கள தேசமே ஆடிப்போயுள்ளது.

சிங்களப் படைகள் சந்தித்த இப் பின்னடைவுகளால், அரசும் ஒரு புதிய நெருக்கடி மிகுந்த சூழல் ஒன்றைச் சந்திககும் நிலை ஏற்பட்டுள்ளது.

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பின் ஒருமாத நிறைவுநாளை வெற்றிநாளாகத் தமிழீழ மக்கள் கொண்டாடிக்கொண்டிருந்தபோது, கிளாலிக் கடலிலும் புலிகள் ஒரு வீரசாதனை படைத்துள்ளனர்.

கிளாலித்தாக்குதல் நடந்து நான்காம் நாள், வடமராட்சிக் கடலில் ஒரு 'டோறா' சண்டைப்படகை மூழ்கடித்து, புலிகள் மீண்டும் அளப்பரியவெற்றியைப் பெற்றுள்ளனர்.

நான்குநாள் இடைவெளிக்குள் அடுத்தடுத்து கடற்படையினர்மீது நடாத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல்களினால், சிங்களக் கடற்படை அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

'இதயபூமி-1' இராணுவ நடவடிக்கையினால் இடிந்து போயிருந்த சிங்கள தேசத்திற்கு, கிளாலிக் கடலிலும் வடமராட்சிக் கடலிலும் நடந்த கரும்புலித் தாக்குதல்கள் மேலும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளன.

இந்தக் கடற் தாக்குதல்களில் சிங்களக் கடற்படை சந்தித்த பாரிய இழப்புகளுடன் கடற்புலிகளுடனான நேரடிக் கடற் சண்டைக்குரிய துணிவையும் அது இழந்திருக்கும் என ஊகிக்கலாம்.

அதாவது, இனிமேல் ஒரு கடற்சண்டையின்போது, புலிகளின் எந்தப் படகு துப்பாக்கிகளுடன் வருகின்றது?; எந்தப் படகு வெடிமருந்துடன் வருகின்றது என்பதை ஊகிக்க முயற்சிப்பதே, கடற்படையினர்க்குப் பிரதான வேலையாக இருக்கும். அதனால், எந்தநேரமும் சிங்களக் கடற்படையினர் ஒரு திகிலுடனேயே இருப்பர். அத்துடன் இனிமேல் நடைபெறப்போகும் கடற் சண்டைகளில், புலிகளின் படகை நெருங்கித் தாக்குவதென்பது தற்கொலை முயற்சிக்கு ஒப்பானது என்று, சிங்களக் கடற் படையினர் எண்ணுவர். இந்த மனநிலை சிங்களக் கடற்படை →

## உள்ளே


★ பத்தாண்டுப் போர்
ஒரு நோக்கு

★ சிறீலங்கா தொடுத்த இரண்டாவது போர்

★ ஏன் இந்தக் கூச்சல்?
புலிகளின் குரல்

★ மணலாற்றில் ஒரு போர்ப்பறை: 'இதயபூமி - 1' இராணுவ நடவடிக்கை

★ குந்த ஒரு குடிநிலம்

★ 'இதயபூமி - 1' வெற்றிக்கு உயிர் தந்த பதின்மர்




மண்கிண்டிமலைத் தாக்குதலின்போது, எதிரியை வீழ்த்தி ஆயுதத்தைக் கைப்பற்றும் புலிவீரன்.


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

Liberation Tigers Of TAMIL EELAM

# புலிகளின் குரல்

## ஏன் இந்தக் கூச்சல்?

இதுவரைகாலமும் சிங்களப் படைகள் சந்தித்த எந்த ஒரு இழப்பிற்கும் எதிராக சிங்களதேசம் காட்டியிராத ஒரு பிரதிபலிப்பை, மண்கிண்டிமலை முகாம் வீழ்ச்சியில் அது காட்டியுள்ளது.

இந்த இராணுவ முகாமைப் புலிகளிடம் பறிகொடுத்ததிற்காக, சிறீலங்காவின் சனாதிபதி, உயர் படைத்தளபதிகள்மீது கடுஞ்சொற்களைப் பயன்படுத்தித் தனது கோபத்தைக் கொட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவியான சிறீமாவோ அம்மையாரும் 'எல்லாவற்றையும் புறந்தள்ளிவிட்டுப் போருக்கு முன்னுரிமை கொடுக்கும்படி' அறைகூவல் விடுத்துள்ளார். ஏனைய எதிர்க்கட்சிகளும் இதேகருத்தை வெளிப்படுத்தியுள்ளன.

சிங்களதேசத்தின் பத்திரிகைகள் எல்லாம் இந்த இழப்பைச் சுட்டிக்காட்டி சிங்கள மக்களுக்கு இனவெறியூட்டியபடி, போரைத் தீவிரமாக்கவேண்டும் என ஆலோசனை கூறியுள்ளன.

ஆலயங்கள், விகாரைகள், மசூதிகளது சொத்துக்கள் திரட்டப்பட்டு, அவற்றைப் போர்ச் செலவுக்குப் பயன்படுத்தி இறுதி வெற்றி காணவேண்டுமென, ஒரு பௌத்த மத துறவி திருவாய் மலர்ந்தருளியுள்ளார்!

விசாரணைக்குழு, இராணுவ உயர் அதிகாரிகளின் இடமாற்றம் என்று படைத்துறைத்தலைமையும் அந்தரப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இவற்றிற்கெல்லாம் என்ன காரணம்?

எழுபது இராணுவத்தினரையும், ஐந்து கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும், புலிகளிடம்சிங்களப்படைது பறிகொடுத்விட்டது என்ற அங்கலாய்ப்பா?

அப்படி இருக்க முடியாதே!

மாங்குளம், கொக்காவில், வெற்றிலைக்கேணி ..... என்று பாரிய இழப்புகள் பலவற்றை ஏற்கெனவே சிங்களப் படைகள் சந்தித்தனவே! அப்போதெல்லாம் இந்த ஆவேசமும் – அங்கலாய்ப்பும் பெரிதாக எழவில்லையே!

மண்கிண்டிமலை முகாம் தகர்க்கப்பட்டபின் மட்டும் சிங்கள தேசம் ஏன் இப்படி ஒட்டுமொத்தமாகக்கூச்சல்போடவேண்டும்?

மண்கிண்டிமலையில் சிங்கள இராணுவம் சந்தித்த ஆள், ஆயுத இழப்புகள் மட்டும் இத்தகைய கூச்சல்களுக்குக் காரணமல்ல. அது நடந்த இடம்தான் சிங்களப் பேரினவாதிகளின் சீற்றத்திற்குக் காரணம்.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தளவில் மண்கிண்டிமலை அமைந்துள்ள மணலாற்றுப்பகுதி, புவியியல் – இராணுவரீதியில் மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இப்பகுதியில் சிங்களவர்களைக் குடியமர்த்தி–சிங்களவரின் பூமியாக மாற்றி, தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நலிவடையச்செய்ய சிங்கள அரசு பெருமுயற்சி செய்து வருகின்றது.

ஆனால், இந்த முகாம் தகர்ப்பின் விளைவாக, அங்கு குடியேற்றப்பட்டிருந்த பல்லாயிரம் சிங்களவர்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்துவிட்டனர். அவர்களை மீண்டும் அங்கே குடியமர்த்த முடியாது சிங்கள அரசு திண்டாடுகின்றது.

இந்தத் திண்டாட்டம் ஒருபுறமும், சிங்களச் சிங்கங்கள் மண் கவ்விவிட்டனவே என்ற அவமானம் இன்னொரு புறமும், பேரினவாத நோக்கில் தலையாயதுமான சிங்களக் குடியேற்ற முயற்சிகளுக்கு ஊறு விளைந்துவிட்டது என்ற ஆத்திரம் – விரக்தி மறுபுறமுமாக, அனைத்துப் பேரினவாத சக்திகளையும் மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு, பத்திரகாளி வேசம் பூணவைத்துவிட்டது.

சிங்களவர்களது கண்களுக்கு முன்– அவர்களுக்கு மத்தியில்–மிகவும் பலத்துடன் இருந்த இந்த இராணுவ முகாமைப் புலிகள் மிகச்சுலபமாகஅழித்தொழித்த நிகழ்ச்சியை, ஒரு அவமானகரமான தோல்வியாகவே சிங்களப் பேரினவாதிகள் கருதுகின்றனர்.

'வெட்கத்துக்குரிய நாள்' (Day of Shame) என்ற தலைப்பில் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை வரைந்த ஆசிரியர் தலையங்கம், இந்த உணர்வைப் பிரதிபலித்துள்ளதை அவதானிக்கலாம் (விபரம் 11 ஆம் பக்கத்தில்).

அத்துடன் தமிழரின் தாயக நிலத்தைப் பிரித்துச் சிதைக்கும் நோக்கில் செய்யப்பட்ட சிங்களக் குடியேற்றங்களுக்குப் பாதுகாப்பாகவும்–நம்பிக்கை நட்சத்திரமாகவும் இதுவரைநாளும் இருந்துவந்த மண்கிண்டிமலை முகாமின் வீழ்ச்சி, குடியேற்றங்களின் வேகத்தைத்தடுத்து, குடியேற்றவாசிகளது நம்பிக்கையை ஊசலாடச்செய்யும் விதத்தில் அவர்களது மனத்தில் பீதியை ஏற்படுத்திவிட்டது என, பேரினவாதிகள் கலக்கமடைந்துள்ளனர்.

அத்துடன், தொடர்ச்சியான விதத்தில் அடுத்தடுத்து இருந்த இராணுவ முகாம்களுள் ஒன்றான மண்கிண்டிமலை முகாமைப் புலிகள் தாக்கியபோது – அதுவும் சிங்களவர் பகுதி என்று அவர்கள் கருதிய இடத்தில் – உறுதியான எதிர்த்தாக்குதலைத் தொடுக்காது, ஆயுதங்களையும் எறிந்துவிட்டு இராணுவத்தினர் பயந்து ஓட்டமெடுத்தது, போர்மூலம் தமிழரின் உரிமைப்போராட்டத்தை ஒடுக்கிவிடவேண்டும் என்று கனவு கண்டுவரும் பேரினவாதிகளுக்கு எரிச்சலைக் கொடுத்துள்ளது.

அதனால்தான் தாக்குதல் நடந்து முடிந்து ஒரு மாதம் கடந்த நிலையிலும், அதை ஜீரணிக்கமுடியாது சிங்களப் பேரினவாதிகள் கூச்சலிடுகின்றனர்!

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு அமைதிவழியில் அரசியல் தீர்வு காணும் நோக்கம் இல்லை என்ற கருத்தைத்தான், இந்த இனவாதக் கூச்சல்கள் எடுத்துக் காட்டுகின்றன. ○

## சிங்கள தேசத்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினரின் துணிவையும், போரிடும் ஆற்றலையும் சிதைக்கும் என்று நம்பலாம்.

அதேவேளை கடலில் நடந்த இக் கரும்புலித்தாக்குதல்களின் விளைவாக, சிங்களக் கடற்படையின் கடல்ரோந்துகள் பெரிதும் பாதிக்கப்படலாம். குறிப்பாக கிளாலிக் கடல் நீரேரியில் புலிகளின் கை மேலோங்கியிருக்கும் என்பதும், பொதுமக்களின் பயணத்திற்கு இது பேருதவியாக இருக்கும் என்பதும் குறிப்பிடக் கூடியதொன்றாகும்.

கிளாலித்தாக்குதல் நடைபெற்ற நாளன்று, பயணிகள் மீது ஒரு படுகொலை நடவடிக்கைச்குச் சிங்களக் கடற்படையினர் முயற்சித்தனர் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளன.

அன்றைய நாள்தான் மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பின் ஒருமாத நிறைவு நாளாகும்.

மண்கிண்டிமலையில் சிங்கள இராணுவம் சந்தித்த பேரிழப்புக்குப் பழிவாங்குமுகமாக, முகாம் தகர்ப்பு நடந்த நான்காம் நாள், சிங்களக் கடற்படையினர் கிளாலியில் ஒரு படுகொலையைச் செய்தனர். அதில் பத்துப்பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

அதேபோல முகாம் தகர்ப்பின் ஒரு நிறைவுமாத நாளன்றும் பயணிகளைப் படுகொலை செய்து தமது சகாக்களின் இழப்புக்களை நினைவுகூர, சிங்களப்படை முயற்சிசெய்தது.

''கடற்படையினர் வந்த ஐந்து படகுகளையும் எமது படகுகள் வழிமறித்துத் தாக்குதலைத் தொடங்கியபோது, அவற்றில் இரண்டு படகுகள் திசை மாறி பயணிகள் படகுகளை நோக்கிச் செல்லத்தொடங்கின. அதில் ஒரு படகுமீதே கரும்புலித்தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.'' கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசையின்கூற்று இதை மெய்ப்பிப்பதாகவே உள்ளது.

இவை ஒரு புறமிருக்க, ஈழப்போர் 2 என அழைக்கப்படும் இப்போர் ஆரம்பித்த நாளிலிருந்து சிங்களப் படைகள் சந்தித்துவந்த பாரிய உயிரிழப்புகள் காரணமாக, படையினரின் போரிடும் உறுதியில் பெருந்தளர்வு ஏற்பட்டிருந்ததை, சிங்களத் தளபதிகளே முன்னர் ஒப்புக்கொண்டிருந்தனர்.

பெருந்தொகையில் படையை விட்டோடியதும் ( சுமார் 8000 பேர் ) படைக்கு ஆள்சேர்வதில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டதும் ஏற்கெனவே அறிந்த உண்மைகள். 1992 ஆம் ஆண்டு இந்தநிலை உச்சத்தில் இருந்தது.

ஆனால், இந்த ( 93 ஆம் ) ஆண்டு இது சீரடைந்துவிட்டதாகச் சிங்களத் தளபதிகள் மகிழ்ச்சி தெரிவித்திருந்தனர். படையைவிட்டு ஓடுவோர் எண்ணிக்கை பெருமளவு குறைந்ததை இதற்கு ஆதாரமாகக் காட்டியுள்ளனர். ஆனால், இதன் உண்மை என்னவென்றால், இந்தஆண்டின் நடுப்பகுதிவரை புலிகள் இயக்கம், தீவிரமானமுறையில் தாக்குதல்களை சிங்களப் படைக்கு எதிராகத் தொடுத்திருக்கவில்லை என்பதேயாகும். அதனால்தான் சிங்களப் படையில் ஏற்பட்ட நெருக்கடிகள் சீரடைந்துவந்ததைப் போல ஒரு தோற்றப்பாடு நிலவியது.

ஆனால் மண்கிண்டி மலை முகாம் தகர்ப்புடன், புதியஅத்தியாயம் ஒன்று தொடங்கிவிட்டது என்பதை, அடுத்துவந்த கிளாலிக் கடற்தாக்குதலும் வடமராட்சிக் கடற்தாக்குதலும் சுட்டிக்காட்டுகின்றன.

இதனால், சிங்களப்படைக்குள் தணிந்திருந்த நெருக்கடிகள் மீண்டும் விஸ்வரூபம் எடுக்கும் என எதிர்பார்க்கலாம்.

இதன் ஆரம்ப அறிகுறியாக, மண்கிண்டிமலை முகாம் தகர்க்கப்பட்டதன்பின் சிங்களத் தேசத்தில் நடந்த படைக்கான ஆட்சேர்ப்பில், மிகக்குறைந்தளவு சிங்கள இளைஞர்களே கலந்து கொண்டனர் என்ற பி.பி.சியின் செய்தியைக் கருத்திலெடுக்கலாம்.

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பும், கிளாலித்தாக்குதலும் வடமராட்சிக் கடற்தாக்குதலும் கொடுத்த இராணுவத் தோல்விகள், கொழும்பின் அரசியலையும் பாதித்துள்ளன.

பிரேமதாசா கொல்லப்பட்டபின் பதவிக்கு வந்த புதிய சனாதிபதி டி.பி விஜயதுங்கா, இனித்தான் இராணுவத் தோல்விகளால் எழும் அரசியல் நெருக்கடிகளுக்கு, முகம் கொடுக்கப் போகின்றார். ○

www.eelamview.com

# பத்தாண்டுப் போர்

## - ஒரு நோக்கு



**ப**துங்கித்தாக்குதல் ஒன்றின்மூலம், பதின்மூன்று இராணுவத்தினரைக் கொன்று தொடங்கிய பத்தாண்டுப் போர் வரலாறு, எழுபது இராணுவத்தினரைக் கொன்ற ஒரு இராணுவ முகாம் தகர்ப்புடன் முடிவடைந்துள்ளது.

இப் பத்தாண்டுப் போரின் தொடக்கமும் முடிவும், இவை இரண்டிற்கும் இடையில் நடந்தேறிய போராட்டச் சம்பவங்களும், தமிழர்படையணியின் படிமுறைவளர்ச்சியையும், சிங்களப் படையின் இயலாமையையும் தெளிவாகக் காட்டுகின்றன.

அதேவேளை, இந்தப் பத்தாண்டுப் போர் ஈழத்தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய வேதனைகளும் - இழப்புகளும் ஒரு துயரகாவியமாகவே உள்ளன. எனினும் தனியரசொன்றை அமைப்பது தொடர்பான தமிழீழ மக்களின் இலட்சியக்கனவு வெறும் மாயையல்ல - அது ஒரு நடைமுறை உண்மை - என நிரூபிக்கும் வகையிலேயே இந்தப் பத்தாண்டுகளும் அமைந்திருந்தன. இதில் இந்தியப் படைகளின் வருகையும், அதன் ஆக்கிரமிப்புச் செயல்களுக்கெதிரான புலிகளின் போரும், மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றன.

இந்தப் பத்துவருடப் போரை மூன்று கட்டங்களாக வகுத்து, அதன் விளைவுகளைத் தெரிந்துகொள்ள முனைவது, போரின் பரிமாணத்தை அறியப் பெரிதும் உதவும்.

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலத்திலிருந்து, 1987 யூலை 29 இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தின் பிரகாரம், இந்தியப் படைகள் தமிழீழம் வந்தது வரையான காலப்பகுதியை ஈழப்போர் - 1 என அழைப்பர்.

1987 ஒக்ரோபர் 10 ஆம் திகதி தொடக்கம், இந்தியப் படைகள் தமிழீழ மண்ணைவிட்டு வெளியேறும் வரை 1990 மார்ச் (24) நடந்த இந்திய ஆக்கிரமிப்புக்கெதிரான போரை இந்திய - புலிகள் போர் என அழைப்பர்.

இந்தியப் படைகளின் முழுமையான வெளியேற்றத்தின்பின், மீண்டும் 1990 யூன் 10 ஆம் திகதி சிங்களப்படைகளுடன் ஆரம்பமாகி இன்றும் தொடர்ந்தபடியுள்ள போரை, ஈழப்போர் 2 என அழைப்பர்.

சிறீலங்கா இராணுவ உயர்பீடத்தின் அறிக்கையின்படி - ஈழப்போர் ஒன்றில் சிங்களப் படை 797 ஆட்களை இழந்திருந்தது. 1479 பேர் காயமடைந்திருந்தனர். இதே காலப்பகுதியில் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையின்படி, 680 புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர். இதே காலப் பகுதியில், பெருந்தொகையான தமிழ் மக்கள் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர் "இனக்கலவரங்கள்" என்ற பெயரில் 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் இலங்கைத் தீவுமுழுவதும் நடந்த தமிழ் இனப்படுகொலையாலும், தமிழீழத்தில் நடந்த இராணுவ அட்டூழியங்களாலும் ஏறக்குறைய 20.000 தமிழர்கள் பலியாகியுள்ளனர்.

இந்திய ஆக்கிரமிப்புக்கெதிரான போரில் 1165 சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர்; 1500 பேர் காயமடைந்துள்ளனர் என, இந்திய அரசின் உத்தியோகபூர்வ அறிக்கைகள் கூறியுள்ளன. இதே காலப்பகுதியில் 973 புலிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என, புலிகள் இயக்கத்தின் செய்திக் குறிப்புகள் கூறியுள்ளன அதேவேளை, இக்காலப்பகுதியில், 6000 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் இந்தியப் படைகளினால் கொல்லப்பட்டனர்.

ஈழப்போர் இரண்டில் இதுவரை ஏறக்குறைய 5000 சிங்களப்படையினர் பலியாகியுள்ளனர் (சிங்களக்காவல்துறை, ஊர்காவற் படை மற்றும் துணைப்படை உட்பட) இந்தக் காலப்பகுதியில் ஏறக்குறைய 3500 புலிவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். அதேவேளை இக்காலப்பகுதியில் கொல்லப்பட்ட தமிழ் மக்களது சரியான எண்ணிக்கையைக் கூறமுடியாதுள்ளது. ஆயினும் அது 12 000 இற்கும் அதிகமானது என்று கருதப்படுகின்றது. அதேவேளை பல்லாயிரம் தமிழர்கள் காணாமல் போயுள்ளனர். அமெரிக்காவில் இருந்தபடி இயங்கும் 'ஏசியாவோச்' என்ற மனித உரிமைக் கழகம், இவ்விதம் காணாமல் போனோர் 40, 000 என அறிவித்துள்ளது. இவர்களில் மிகப்பெரும்பான்மையினர் தென் தமிழீழத்தை, அதுவும் குறிப்பாக மட்டக்களப்பு - அம்பாறைப் பிராந்தியங்களைச் சேர்ந்தோர் ஆவர்.

இந்தப் பத்தாண்டுப் போர்க்காலத்தில் மட்டுமல்ல, சிங்களவர்களின் கைகளிற்கு என்று இலங்கைத்தீவின் ஆட்சி கைமாறியதோ, அன்றிலிருந்து, தமிழினத்தை அழிப்பதற்குரிய ஒரு போர்முறைத் திட்டத்தை சிங்களப் பேரினவாதம் வரைந்து செயற்படுத்திவருகின்றது.

படிப்படியாக, பலத்தைப் பயன்டுத்தியோ - வஞ்சகச்சூழ்ச்சியுடனோ, தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதும், தமிழர்களின் பொருளாதார வாழ்வைச் சிதைத்து, அவர்களின் மொழியை நசுக்கி, அவர்களது பண்பாட்டை நாசப்படுத்துவதும், தேவை ஏற்படும்போது ஏதோ ஒரு சாட்டைக் கூறிக்கொண்டு இனவாரியாகத் தமிழர்களைக்கொன்று, தமிழினப் படுகொலை மூலம் இலங்கைத்தீவை ஒட்டுமொத்தமாக சிங்களவர் பூமியாக மாற்றுவதுதான், சிங்களப் பேரினவாதத்தின் நடைமுறை வேலைத் திட்டமாக நீண்டகாலமாக இருந்து வருகின்றது.

ஆரம்பத்தில் இத்தமிழின அழிப்பு முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாத்வீக வழிகளில் போராடமுயன்ற தமிழர்கள்மீது அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டபோது, இதற்கெதிரான ஒரு தற்காப்புமுறையாக தமிழிளைஞர்களின் ஆயுதஎதிர்ப்புப் போராட்ட வடிவம் முகிழ்ந்து - வளரத் தொடங்கியதை எல்லோரும் அறிவர்.

இந்த ஆயுத எதிர்ப்புப் போராட்டம் 1983 ஆம் ஆண்டு ஒரு உயர்பரிமாணத்தைப்பெற்று சிங்களப்படைகளுக்கும் - புலிகள் இயக்கத்திற்குமான ஒரு போராக வடிவம் கண்டது.

இப்பத்தாண்டுப் போரிலும் சிங்கள அரசின் இலக்கு, தமிழின அழிப்பாகவே இருந்தது. அதாவது. சூழ்ச்சிகர நடவடிக்கைமூலம் தமிழினத்தை அழிக்க எடுத்த முயற்சிகள் தடைப்பட, சிங்களப் பேரினவாதம் தனது ஆயுதப் படைகளை ஏவி நேரடியாகத் தமிழினஅழிப்பை நிறைவேற்ற முயன்றது. இப்பத்தாண்டுகளில் பல்வேறு கட்டங்களில், பல்வேறு வடிவங்களில் தமிழின அழிப்பை நிறைவேற்ற சிங்கள அரசு முயன்றது.

முதலில், வேகமானமுறையில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவி தமிழர்தாயகத்தை விரைவாக விழுங்குவதிலும், கூறுபோடுவதிலும் அதிகசிரத்தை காட்டியது. குறிப்பாக தமிழீழத்தை இரண்டு கூறுகளாக, நிரந்தரமாகப் பிரித்துவிட, மணலாற்றுப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களை வேகப்படுத்தியது. அதேவேளை திருக்கோணமலையில் பெருந்தொகையில் சிங்களவர்களைக் குடியமர்த்திச் அதை, சிங்களவர் மாவட்டமாகவும் மாற்ற முயன்றது. அதேபோல அம்பாறை மாவட்டத்தையும் சிங்களமயப்படுத்தியது. அத்துடன் தமிழீழ தேசியத்தின் போரிடும் அலகான இளைஞர்சக்தியை வேட்டையாடியும், கைதுசெய்து சிறையிலடைத்தும், துன்புறுத்திப் பணியவைத்தும், ஆயுதப் போராட்டத்தின் வீரியத்தைக் குறைக்க முயன்றது. அதேசமயம் இந்த ஆயுதப் போராட்டத்திற்கு உயிர் கொடுத்து - அதைத் தலைமைஏற்று - நடாத்தும் புலிகள் இயக்கத்தை அழிக்க சிங்கள அரசு தனது படைகளை முழுஅளவில் ஏவிவிட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இத்தகைய வழிமுறைகள்மூலம் சிங்களப் பேரினவாதம் அழிக்கமுயன்ற அதேவேளை, இந்தப் பத்தாண்டுப் போரின் ஆரம்ப ஆண்டான 1983 இன் இறுதிப்பகுதியில், இந்திய அரசு எமது விடுதலைப் போராட்டத்தைத் தனது நலனுக்குப்பயன்படுத்த தீர்மானித்த போராட்டத்தில் தலையிட்டது. முரண்டுபிடித்த இலங்கை அரசை தனது காலடியில் கொண்டு வருவதற்காக விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, தனது இராஜதந்திர நாடகத்தை அரங்கேற்றியது.

சிங்களப் பேரினவாதம் கருதியதுபோல புலிகளை நசுக்க முடியவில்லையென்பதுடன், புலிகள் இயக்கம் பலமடைந்து ஒரு விடுதலைச் சேனையாக மாறிவருவதை, இப்பத்தாண்டுப் போரின் நடுப்பகுதியில் சிங்கள அரசு உணர்ந்துகொள்ளத் தொடங்கியது.

இந்தக்கட்டத்தில் சிங்கள அரசின் பேரினவாத நலனும் இந்திய அரசின் வல்லாதிக்க நலனும், ஒரு கோட்டில் சந்தித்துக்கொண்டன.

சிங்கள அரசின் நலனை நிறைவேற்றிக் கொடுப்பதன்மூலம் இலங்கைத்தீவைத் தனது ஆதிக்க வியூகத்துள் கொண்டுவர, இந்தியா முடிவு செய்தது. எனவே விடுதலைப் போராட்டத்தை அழிக்க, இந்தியா படைகளைத் தமிழீழத்திற்கு அனுப்பியது.

இப் பத்தாண்டுப் போர்க்காலத்தில் பெறுமதிமிக்கதும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தலைவிதியையே தீர்மானித்ததுமான காலகட்டம், 1987 யூலையிலிருந்து 1990 வரையான சுமார் இரண்டரை வருட காலப்பகுதியே ஆகும். இந்தக் காலப்பகுதியில் நடந்த இந்திய - புலிகள் யுத்தம், எமது போராட்ட வரலாற்றின் மிக முக்கியமான ஒரு அத்தியாயமாக என்றைக்கும் இருக்கும்.

*கூப்பிய கரங்களுடன் வானத்தை அண்ணாந்து பார்த்து நின்ற தமிழினத்தைப் பார்த்து, "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்று அன்றைய சிங்களத் தேசத்தின் அதிபதி ஜெயவர்த்தனா முழங்கினார். 16 வருடங்களின்பின் இன்று, அதே வார்த்தைகளை அதே அரசிற்கு எதிராக அச்சமின்றி முழங்கும் சக்தியுடன் தமிழினம் இருக்கின்றது. இந்த மகாசக்தியை பிரபாகரன் என்ற பெருந்தலைவன் தமிழினத்திற்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்.*

புலிகளை நிராயுதபாணிகளாக்கும் வேலையைப் பொறுப்பெடுத்த இந்தியப்படைகள், புலிகளிடம் ஆயுதங்களைப் பறிகொடுத்த சரித்திரம், இக்காலப்பகுதியில் நடந்தது. இறுதியில் தனது கௌரவம், நற்பெயர் அனைத்தையும் தமிழீழத்தின் காடுகளுக்குள்ளும் பனங்கூடல்களுககு அடியிலும் வயல்வெளிகளிலும் தொலைத்துவிட்டு, இந்தியப்படைகள் அவமானத்துடன் தமிழீழத்தைவிட்டு வெளியேறின.

மீண்டும் சிங்கள அரசு தமிழர் இனப்படுகொலையைப் பொறுப்பெடுத்துக்கொண்டது. இம்முறை மிகவும் கோரமான வடிவத்தில் இனப்படுகொலையைச் செய்யத் திட்டமிட்டது. தென் தமிழீழம் இத்திட்டத்தின் பிரதான குறியாக இருந்தது. மிகப்பெரியதொரு தமிழ் இனப்படுகொலைக்கு தென்தமிழீழம் இலக்கானது.சிங்களப் படைகளுடன் இணைந்து முஸ்லிம் காடையர்களும் தமிழர்களைக் கொன்று குவித்தனர்.

வடதமிழீழத்தின்மீது ஒரு பூரண பொருளாதாரத் தடையை சிங்கள அரசு விதித்து, அத்தியாவசியப் பொருட்களை தமிழர்களுக்கு எதிராக ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திபது அதேவேளை கிழக்கில் அப்பட்டமானஒரு இனப்படுகொலையை

(13 ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# மணலாற்றில் ஒரு போர்ப்பறை- ‘இதயபூமி - 1’ இராணுவ நடவடிக்கை

**25 - 07 - 1993** அன்று நடந்த ‘இதயபூமி-1’ இராணுவ நடவடிக்கை, அரசியல்- இராணுவரீதியில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றுவிட்ட புலிகளின் ஒரு போர் நடவடிக்கைதான். புலிகள் இயக்கம் பெற்றுவரும் போர்த்திறனின் ஒரு படி வளர்ச்சியை இத்தாக்குதல் நடவடிக்கை தெளிவாகக் காட்டியுள்ளது. அத்துடன் ‘பத்தாண்டுப் போரின்’ முடிவைக் குறிக்கும் போர்ப்பறையாகவும் அம்முகாம் தகர்ப்பு அமைந்தது.

‘எழுபதிற்கும் மேற்பட்ட படைவீரர்களையும் ஐந்து கோடி ரூபா பெறுமதியான படைக்கலன்களையும் பறிகொடுத்துவிட்டோம்’ என்ற செய்தி கொடுத்த அதிர்ச்சியிலும் பார்க்க, சிங்கள ஆட்சியாளர்களுக்கு அது நடந்த இடம் மேலும் அதிர்ச்சியைக் கொடுத்தது.

மணலாறு, வட - தென் பிராந்தியங்களை இணைக்கும் மைய நிலம் மட்டுமல்ல, தமிழீழத் தேசத்தின் இதயமும் அதுதான். மணலாற்றை முழுமையாக ஆக்கிரமித்து, தமிழரின் தாயகத்தைத் துண்டாடி, விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையையே நொருக்குவது சிங்கள ஆட்சியாளர்களின் மூல இலக்கு.

சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கத்தின்மீது, அதை அடைய அவர்கள் வகுத்த போர்முறைத் திட்டத்தின்மீது, அப்போர்முறைத் திட்டத்தின்மூலம் அவர்கள் வெற்றிபெற்று வருவதாகக் கருதிய நம்பிக்கைமீது விழுந்த முதலாவது பேரிடி ‘இதயபூமி - 1’ இராணுவ நடவடிக்கை.

இதன் ஒருமாத நினைவுநாளை (25. 8- 93) முன்னிட்டு வெளியிடப்பட்ட ஒரு சிறு நூலை, இங்கே முழுமையாகத் தந்துள்ளோம்.

‘இதயபூமி-1’ இராணுவ நடவடிக்கைபற்றியதும் அதில் வீரச்சாவடைந்த மாவீரர்களது சிறுகுறிப்புக்களைக் கொண்டதுமான இந்த ஆக்கத்தை, துணைப்படை வீரர்களுள் ஒருவரான ‘மணலாறு விஜயன்’ என்பவர் எழுதியுள்ளார்.

வட - தென்தமிழீழத்தை இணைக்கின்ற பூமி மணலாறு.

இந்திய வல்லாதிக்கப் பசிக்கு எம் விடுதலைப்போர் இரையாகிப் போய்விடாமல் காத்த பூமி.

தீர்க்கமும், தியாகமும், வீரமும், விவேகமும் நிறைந்த தலைவனை தமிழ்மக்களுக்காய் காத்துத்தந்த பூமி.

புதிய பல படையணிகளை வளர்த்தெடுக்கத் தளமாக அமைந்த பூமி.

தமிழீழ விடுதலைப்போரில் சாதனைகள் பல படைக்க களம் தந்த பூமி.

தென் தமிழீழப் போருக்கு உயிர் கொடுக்கும் ஊடகமாய் அமைந்த பூமி.


கடல்வளமும், நிலவளமும், வன வளமும் நிறைந்த பூமி.

மொத்தத்தில் களம், தளம், வளம் நிறைந்த மணலாறு தமிழீழத்தின் இதயபூமி என்பதை எவரும் மறுக்கமுடியாது.

இதயத்தில் கால்பதிக்க நினைத்த எதிரிக்குத் தகுந்த பாடம் புகட்டிய எம்வீரர்களின் நடவடிக்கைக்கு, ‘இதயபூமி - 1’ எனப் பெயரிட்டது மிகப் பொருத்தமானதே.

ஏறக்குறைய ஏழுமைல் பிரதேசத்தை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவித்து, துடைத்துத் துப்புரவாக்கிய இந்த அதிரடி நடவடிக்கையில் நிலைநாட்டப்பட்ட சாதனைகள், படிப்பினைகள், நெஞ்சில் ஆழப்பதிந்த தியாக நினைவுகள், மனங்கொண்ட நிறைவுகள் மிகப்பல.

சாதனை, படிப்பினை, நிறைவு, நினைவு அனைத்தும் நிறைந்த ‘இதயபூமி - 1’ நடவடிக்கை, தமிழீழ விடுதலைப்போரின் புதிய வரலாற்றுப் பதிவு.




## மண்கிண்டிமலை

கொக்குத்தொடுவாய்க் கிராமத்திலிருந்து முந்திரிகைக்குளம் நோக்கி செல்லும் வீதியின் மையத்தில் அமைந்துள்ளது இம்மலை.

வட - தென் தமிழீழத்தை கூறுபோட இவ்வீதியில் இராணுவ வேலியை அமைத்துக்கொண்டது இலங்கையரசு. இந்த இராணுவ வேலி அறுந்துவிடாமலிருக்க, மண்கிண்டிமலையில் மிகப்பெரியதொரு இராணுவ முகாமை அமைத்துக் கொண்டது.

இராணுவ முகாமைச்சூழ திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தையும் அது அமைததுக்கொள்ளத் தவறவில்லை. அதுமட்டுமல்ல, ‘ஜானகபுர’ என சிங்களப் பெயரையும் அதற்குச் சூட்டிக்கொண்டது.

முந்திரிகைக்குள இராணுவ முகாம், சாம்பான்குள இராணுவ முகாம், மண்கிண்டி இராணுவ முகாம், கோட்டக்கேணி இராணுவ முகாம், கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம் என வரிசையாக அமைக்கப்பட்ட முகாம்களினிடையே, பல தொடர் பாதுகாப்புக் காவலரண்களையும் அமைத்துக்கொண்டது.

மண்கிண்டி (ஜானகபுர) இராணுவமுகாமும், அதனருகே அமைந்த இரண்டு இராணுவ மினி முகாம்களும், இவற்றைச் சூழ திட்டமிட்டு அமைக்கப்பட்ட ஆயுதம் தரித்த சிங்கள ஊர்காவல் படையின் நிலைகளும் முப்பதே நிமிடங்களில் துடைத்துத் துப்புரவாக்கப்பட்டன.

இப்பணியில் விடுதலைப் புலிகளோடு, அவ்வமைப்பின் பிரிவான- விசேட பயிற்சி பெற்ற- துணைப் படை வீரர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

மூன்றே ஆண்டுகளில் மிகவேகமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இவை.

கொக்குத்தொடுவாய், கோட்டகேணி இராணுவத்தினருக்கு உதவி வழங்கும் முக்கிய தளமாக மண்கிண்டி இராணுவ முகாமமைந்தது மட்டுமல்ல, மணலாற்றின் ஏனைய தமிழ்க் கிராமங்கள்மீது எறிகணைகள் வீசும் தளமாகவும் இதனை மாற்றிக்கொண்டனர். இதே இராணுவ முகாமில் இருந்தே சில திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகள் மணலாற்றில் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய பலமான ஒரு இராணுவத் தடுப்பு வேலியால் புலிகள் வட தமிழீழத்திலிருந்து தென் தமிழீழத்துக்கு நகர்வதையும், தென் தமிழீழத்திலிருந்து வட தமிழீழத்துக்குள் நகர்வதையும் தடுத்துவிடலாமென, இலங்கையரசின் தலைமையும் படைத்தலைமைகளும் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டனர்.

கொக்குத்தொடுவாய், கொக்கிளாய்ப் பிரதேசத்திலும் தென்னமரவாடி பிரதேசத்திலும் தன் சுய விருப்பிற்கேற்ப குடியேற்றங்களை அமைத்துக்கொள்ள, இந்த இராணுவ முகாம்களை அரசு பயன்படுத்திக்கொண்டது.

தமிழீழ இலக்கைத் துண்டிக்க மட்டுமன்றி, மணலாற்று கடல், நில, வன வளங்களைக் கபளீகரம் செய்யவும் இம் முகாம்களைப் பயன்படுத்திக்கொள்ள முனைந்தது. இச் சிந்தனையின் வெளிப்பாடாக அளம்பில் கிராமத்தைப் பாரிய இராணுவ முகாமாக மாற்றினர். ஆனால் அம்முகாமைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியாமல் பின்வாங்கிச் சென்றனர்.

நாயாற்றுப் பகுதியில் கடல்வழியால் பலமுறை தரையிறங்க முயற்சி செய்து தோல்வி கண்டனர். இவையெல்லாம் மணலாற்றின் கடல் வளத்தினை தன்வசமாக்க நினைத்துத் தோற்றுப்போன வரலாற்றுப் பாடங்கள்.

மணலாற்றுக்கேயுரிய வனவளத்தையும், அங்கு அமைந்திருக்கும் புலிகளின் பலம்மிக்க படைத்தளங்களையும் கைப்பற்றும் நோக்கில் ஹயசேன, மின்னல், ஹய பார (சிக்சர்) என்ற பெயர் சூட்டி மிகப் பெரும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, அவ்வப்போது முறையான தோல்விகளைச் சந்தித்து, நவீன பீரங்கிகளைக் கூட பறிகொடுத்து ஓடியதை அவர்கள் மறக்க மாட்டார்கள்.

இவை எல்லாம் கடந்தகாலத்தில் சிங்கள அரசின் தலைமையும், இராணுவத் தலைமைகளும் கற்றுக்கொண்ட கசப்பான உண்மைகள். இந்தக் கசப்பான நடவடிக்கைகளின் போதெல்லாம், மண்கிண்டி இராணுவ முகாமைப் பெரிதும் பயன்படுத்திக்கொண்டனர். மொத்தத்தில்......

மணலாற்றிலிருந்து தமிழ் மக்களை வெளியேற்றுவதற்கும் -

வட - தென் தமிழீழத்தைக் கூறுபோடுவதற்கும்

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அமைத்துக்கொள்வதற்கும்-

கடல், வன வளங்களை சுருட்டிக்கொள்வதற்கும் -

கொக்குத்தொடுவாய், கோட்டக்கேணி, சாம்பான்குள இராணுவ முகாம்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் -

விடுதலைப் புலிகளின் பலம்மிக்க காட்டுத்தளங்களைத் தாக்கி அழிக்கும் முயற்சிக்கும் - மண்கிண்டி இராணுவ முகாமை பெரிதும் பயன்படுத்திவந்தனர்.

www.eelamview.com

சிங்கள தேசத்தின் சிந்தனையும் செயலும் 'இதயபூமி - 1' நடவடிக்கையினால் சிதறடிக்கப்பட்டுள்ளமை மறைக்கமுடியாத உண்மை.

# 'இதயபூமி-1' தாக்குதலின் உணர்வலைகள்

1983 ஆம் ஆண்டு யூலைத் திங்கள் 23ஆம் நாள், திருநெல்வேலியில் நடைபெற்ற இராணுவத்தின் மீதான வெற்றிகரத் தாக்குதல், உலகின் கவனத்தினை தமிழீழ விடுதலைப் புலிகளின் இலட்சியப் போரில் திசைதிருப்பியது.

1987ஆம் ஆண்டு யூலைத் திங்கள் 5ஆம் நாள், மில்லரின் கரும்புலித் தாக்குதலில், இலங்கைப்படையும், அரசும் கதிகலங்கி இந்தியாவின் காலடியில் விழுந்தன.

பலம்மிக்க இந்தியப்படையை எதிர்த்துநின்று விடுதலைப்போரின் உறுதியை நிலைநிறுத்தியபோது, உலகம் வியந்து நின்றது. அமெரிக்காவுக்கொரு வியட்நாம், ரஷ்யாவுக்கொரு ஆப்கானிஸ்தான், இந்தியாவுக்கொரு தமிழீழம் பாடமாய் அமைந்ததென, இந்தியாவின் தோல்வியை 'வெரித்தாஸ்' போன்ற வெளிநாட்டு வானொலிகள் கணிப்பிட்டன.

முற்றுகைக்குள்ளாக்கப்பட்டு கொக்காவில், கொண்டச்சி, கோட்டை, மாங்குளம் இராணுவ முகாம்கள் கைப்பற்றப்பட்டபோது தமிழீழத்தின் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் மீண்டுமொரு முறை கவனம் திசை திருப்பப்பட்டது.

ஆனையிறவுச் சமர், ''இலங்கைத் தீவில் இரண்டு இராணுவங்கள்'' என்ற கருத்தைவிதைத்தது. அதிரடி மூலம் முப்பது நிமிடங்களில், கேந்திரமுக்கியத்துவம் மிக்க மண்கிண்டி இராணுவமுகாம் தகர்க்கப்பட்டமை, உலகப் பத்திரிகைகள்-வானொலிகள் கவனத்தை ஈர்த்தது மட்டுமன்றி, மீண்டும் உலக உதவியினை நாடும் நிலைக்கு இலங்கையரசைத் தள்ளியுமுள்ளது.

''விடுதலைப் புலிகள் பலவீனமடைந்துள்ளதாலேயே போர் நிறுத்தம் - பேச்சுவார்த்தை என்பவற்றை நாடியுள்ளனர்'' என்ற இலங்கையரசின் கனவு, 'இதயபூமி - 1' நடவடிக்கையால் கலைந்துபோயுள்ளது.

''வடக்குக் கிழக்கை சிங்களக் குடியேற்றமூலமும் இராணுவ முகாம்களின்மூலமும் துண்டித்துவிட முடியும்'' என்ற, இராணுவத்தினதும் அரசினதும் எண்ணம் சிதறடிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தை நம்பி சிங்கள மக்கள் குடியேற்ற நிலைகளில் குடியேற மறுத்து, இடம் பெயர்ந்து ஓடும் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

கற்பூரமும், 'பற்றறி'யும், பெற்றோலும் புலிகளின் விடுதலைப் போராட்டத்தை நலிவடையச் செய்யவில்லை; பொருளாதாரத் தடையால் விடுதலைப் போராட்டத்தை நலிவடையச் செய்யலாமென்ற தப்பான முடிவு சிதைக்கப்பட்டுள்ளது.

கனரக ஆயுதங்கள் எண்ணற்ற வகையில் பறிகொடுக்கப்பட்டதால், இராணுவப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்களும், கனரக ஆயுதங்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகிவிட்டதுடன். கேலிக்குரியதாயும் அமைந்துவிட்டது.

அரசுத்தலைமை, கூட்டுப்படைத் தலைமை, இராணுவத் தளபதிகளிடையே விசனங்களும் முரண்பாடுகளும் முளைவிட்டுள்ளன.

மணலாற்றுக் காட்டில் மேற்கொள்ளப்பட்ட ஏழு இராணுவ நடவடிக்கைகளுக்கு, மண்கிண்டி இராணுவமுகாம் கட்டளைத் தலைமையகமாகப்பயன்படுத்தப்பட்டது; அதனால் அனைத்து இராணுவத் தளபதிகளும் கால்மிதித்த தளம். இத்தளமேசிதைக்கப்பட்டமை இராணுவத் தளபதிகளினதும் சிப்பாய்களினதும் உறுதியைக் குலைத்துள்ளது. மாறாக, விடுதலைப்புலிகளின் வேகமும் உறுதியும் வளர்க்கப்பட்டுள்ளன.

உலகப் பத்திரிகைகளும் செய்தித்தாபனங்களும் தொடர்ச்சியாக இத்தாக்குதல் பற்றியும், விடுதலைப் புலிகளின் உண்மை வளர்ச்சி பற்றியும் செய்தி வெளியிட்டுக்கொண்டிருப்பதும், உயர்மட்ட இராணுவக் குழுவொன்று இத்தாக்குதல் பற்றி ஆராய உடனடியாக நியமிக்கப்பட்டதும், இலங்கை ஜனாதிபதி இராணுவத் தளபதிகள் மீது ஆவேசம்கொண்டு பாய்ந்ததும், மாதங்கள் ஒன்றாகியும் அவர்கள் குழப்பத்திலிருந்து விடுபடாமல் இத்தாக்குதல் பற்றியே ஆராய்வதும் 'இதயபூமி - 1' தாக்குதலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கும் உணர்வலைகளும், உண்மைகளுமாகும்.

## கைதிகள் விடுதலை

'இதயபூமி - 1' நடவடிக்கையின் போது திசைமாறி, திகைத்து தஞ்சமடைந்த சிங்கள மக்கள் ஏழு பேரை விடுதலைப் புலிகள் எந்த வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்தனர். தென்னிலங்கைப் பத்திரிகைகள் இவ்விடுதலைபற்றி ஆச்சரியத்தோடு கருத்து வெளியிட்டன. ஆனால், இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமேயில்லை.

ஏதுமறியாத ஏழைச் சிங்கள மக்களுக்கு ஆசைகாட்டி, தமிழர்கள் உங்களுக்கு எதிரானவர்களென்ற தவறான கருத்தைத் திணித்து, ஆயுததாரிகளாய் மணலாற்றில் குடியேற்றியது இலங்கையரசு

இனவாத அரசியல் வெற்றிக்கும், இனவழிப்பு இராணுவ முகாம்களின் பாதுகாப்பிற்கும் இவர்கள் கவசங்களாக்கப்பட்டனர். ஆயுதமேந்திய குடியேற்றவாசிகளென்ற அடிப்படையில், புலிகள் இவர்களைக் கொன்றுபோட்டிருக்க முடியும். ஆனால் இதை ஏன் அவர்கள் செய்யவில்லை; கைதிகளாக இவர்களை ஏன் தடுத்து வைக்கவில்லை என்கின்ற உண்மைகளை, அனைவரும் உணரவேண்டும்.

ஆசைகாட்டி, ஏமாற்றிக் கொண்டுவந்து குடியமர்த்தப்பட்டவர்கள் இவர்கள். அது மட்டுமன்றி தம் இராணுவத்தில் நம்பிக்கை இழந்து, தம்மைக் கைவிட்டு ஓடிய அவர்களின கோழைத்தனத்தைக் கண்டு, இதுவரை தம்மை ஏமாற்றி குடியமர்த்தி வைத்திருந்த உண்மையை உணர்ந்து புலிகளிடம் தஞ்சமடைந்தவர்கள், இவர்கள்.


பொதுமக்களைக் கொல்வது புலிகளின் இலக்கல்ல. அது மட்டுமன்றி, தஞ்சமடைந்தவர்களைக் காத்து கௌரவிப்பதுதான் தமிழனின் வீரப்பண்பு. சிங்கள மக்கள் எங்களின் எதிரிகளல்ல. அவர்களை என்றும் நாம் நேசிக்கின்றோம். இந்தக் கொள்கையின் நிலைப்பாட்டிலேயே நந்தசிறி, நந்தசிறிகுஸ் தமயந்தி, நந்தசிறி தினேசசிங்க, யந்துலாங்கனி, சூரசேன விமலாவதி, சிந்தக ஜெமதாக, சமான் ஆகிய ஏழுபேரும் விடுதலைசெய்யப்பட்டனர்.

ஆனால், இந்த உண்மைநிலையை புலிகளின் பெருந்தன்மையை சிங்களமக்கள் உணரவிடாது தென்னிலங்கைப் பத்திரிகைகள் தடுத்துள்ளன.

கைதிகள் விடுதலைக்கு முக்கியத்துவம் கொடுக்காது அதை மறைத்து சிங்கள தேசத்தின் பத்திரிகைகள் தமிழ் மக்களுக்கு எதிராக, அவர்களது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக சிங்களவர்கள் வெறிகொண்டெழும் வண்ணம் எழுதி வருகின்றன.



எங்கள் இதயபூமியை அபகரிக்க அமைத்த சிங்கள முகாமை, தகர்த்தழிக்கும் தாக்குதல் திட்டத்தை, படையணிகளுக்கு விளக்குகின்றார், எமது மூத்த தளபதி திரு. சொர்ணம்.



மகளிர் படையணியின் தளபதிகளில் ஒருவரான ராதா, தாக்குதலுக்கான ஆயத்த ஒழுங்குகளில் ஈடுபடும் பெண்புலிகளுடன்.

www.eelamview.com

# துணைப்படையின் மூன்றாண்டு வளர்ச்சியில்...

1984 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் 21ஆம் நாள், முல்லை மாவட்டத்தின் மணலாற்றுப்பிரதேசத்தை, தடைப்பிரதேசமென சிங்கள அரசு பிரகடனம் செய்தது. அன்று வெளியேற்றப்பட்ட மக்கள் இன்றுவரை மீளக் குடியமர்த்தப்படவில்லை. மாறாக சிங்கள மக்களை அப்பிரதேசத்தில் ஆயுததாரிகளாய் குடியமர்த்தி வருகின்றது.

இடம்பெயர்ந்த தமிழர்களுக்கென வந்த - வருகின்ற - வெளிநாட்டு உதவிகளை, இப்பிரதேசத்தில் குடியமர்த்திய சிங்கள மக்களுக்கு வழங்கிவருகின்றது.

முல்லைப்பட்டினக் கிராமங்களின் மக்கள்முல்லைத்தீவு இராணுவ நடவடிக்கையின்போது வெளியேற்றப்பட்டனர் மூன்று ஆண்டுகளாகியும் அந்த மக்கள் நிலைபற்றி, சிங்கள அரசு சிந்திக்கவில்லை. எதிர்மாறாக முல்லை மணலாற்றுப் பிரதேசத்தில் மக்களின் வீடுகள், கல்விக்கூடங்கள், வழிபாட்டிடங்கள், மருத்துவமனைகள் என்பன வான்படைக் குண்டுவீச்சுக்கு இலக்காக்கப்பட்டன.

தொடர்ச்சியாக இம்மண்ணின் மக்களுக்கு சிங்கள அரசால் இழைக்கப்பட்ட கொடுமைகளின் வெடிப்பே, துணைப்படை. தம்மைத் தாமே காத்து, தமதுமண்ணில் சுதந்திரமாகவாழ,1990 இன் ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அமைப்பாக, துணைப்படை தோற்றம் பெற்றது.


முல்லை மணலாற்றுப்பிரதேச கிராம மக்கள் அனைவரும் இப்படையணியில் இணைந்துகொண்டனர்.

ஒருசில கிராமங்கள் தவிர்ந்த ஏனைய கிராம மக்கள், விடுதலைப் புலிகளின் துணையோடு அவர்தம் மண்ணில் மீண்டும் குடியமர்த்தப்பட்டனர். தம்மைத்தாமே தற்காத்துக்கொள்ளும் பயிற்சியோடு, வேட்டைத் துப்பாக்கியணியாகத் துணைப்படை எழுச்சி பெற்றது.

1991 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், துணைப்படை இரண்டாம் கட்ட வளர்ச்சியை எட்டியது. விசேட பயிற்சிபெற்று 303 ரக துப்பாக்கி, எஸ். எல். ஆர். ரக துப்பாக்கியணியாக மாற்றம்பெற்றது. 1993 இன் ஆரம்பகாலம்வரை. முல்லை மணலாற்றுப்பிரதேசங்களில் சிங்கள இராணுவம் மேற்கொண்ட பாரிய நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் முறியடித்தபோது, புலிகளின் தாக்குதலணிக்குப் பலவழிகளில் துணைநின்றனர்.

இன்றுவரை மூன்று துணைப்படை வீரர்கள் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூசிக்கப்படும் கல்லறைகளாயினர்.

1993 ஆம் ஆண்டு ஆனி மாதம், துணைப்படை மூன்றாம் கட்ட வளர்ச்சியினை எட்டியது. பயிற்சியிலும், ஆயுதப் பயன்பாட்டிலும் மாறுபட்ட வளர்ச்சிநிலை கண்டது. விசேட அதிரடிப் பயிற்சி பெற்று, கனரக இயந்திரத் துப்பாக்கியணியாய் நிமிர்ந்து நிற்கிறது.



மணலாற்றில் வரலாறு படைக்கும், எமதியக்கத்தின் துணைப் படை வீரர்கள்.

தமிழீழ மக்களின் மனதில் நம்பிக்கை ஒளி ஏற்படுத்தியதும், சிங்கள அரசையும் இராணுவத் தளபதிகளையும் நிலைதடுமாற வைத்ததுமான 'இதயபூமி-1' என்னும் விடுதலைப் புலிகளின் சிறப்பு நடவடிக்கையில், முல்லைமாவட்ட துணைப்படையணிகள் நேரடியாகக் களத்தில் நின்று உதவி புரிந்தன.

விடுதலைப் போராட்ட வரலாற்றில் இது ஒரு புதிய திருப்புமுனையாகும். இது மட்டுமல்ல,மக்கள் தம் மண்ணை மீட்டுவிடமுடியுமென்ற நம்பிக்கையின் தொடக்கமும்கூட.

அன்று - சென்ற ஆண்டுகளில்- உயிரை பிச்சையெனக் கையேந்தியும் உயிர் பறிக்கப்பட்டது. இன்று அந்நிலைமாறி, ''பகைவனே! உனது உயிரில் ஆசையிருந்தால் எங்கள் மண்ணில் கால்மிதிக்காதே'' என்ற நிலையில், முல்லை மாவட்ட மக்கள் களத்திலும் எல்லையிலும் ஆயுதத்துடன், சொந்த மண்ணைக் காத்து நிற்கின்றனர்.

# மண்கிண்டிமலையில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் படைத்தளபாடங்களும்!

★ ரி - 56 2 ரக துப்பாக்கி ... 65
★ ரி - 56 1 ரக துப்பாக்கி ... 52
★ ரி - 56 புதியரக துப்பாக்கி ... 02
★ ரி - 81 ரக துப்பாக்கி ... 13
★ 303 ரக துப்பாக்கி ... 24
★ ஏ கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கி ... 07
★ பி. கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கி ... 01
★ 60 மி மீ. மோட்டார் ... 05
★ 81 மி. மீ. மோட்டார் ... 01
★ வேட்டைத் துப்பாக்கி ... 11
★ 203 கைத்துப்பாக்கி (டொங்கான்) ... 04
★ ஆர். பி. ஜி. ... 07
★ றிப்பீற்றர் ... 01
★ ஆர். பி. ஜி. எறிகணை - மனித எதிர்ப்பு ... 44
★ ஆர். பி. ஜி. எறிகணை - டாங்கி எதிர்ப்பு ... 76
★ புறப்பிளர் ... 134
★ 60 எம். எம். எறிகணை ... 231
★ 60 எம். எம் எறிகணை வெளிச்சக்குண்டு ... 26
★ 81 எம். எம். எறிகணை ... 22
★ 81 எம். எம். எறிகணை வெளிச்சக்குண்டு ... 22
★ எம். எம். இன்சென்றி (எரி ஷெல்) ... 01
★ ஜே. ஆர். ரக கைக்குண்டு ... 154
★ எம். 75 ரக கைக்குண்டு ... 71
★ எம். 73 ரக கைக்குண்டு ... 166
★ 40 எம். எம் எறிகணை ... 20
★ பெரிய ஜே. ஆர். கைக்குண்டு ... 01
★ ரி. என். ரி. கைக்குண்டு ... 03
★ ரி. பி. கிளைமோர் சிறியது ... 07
★ வாகனக் கண்ணிகள் ... 10
★ கான் எக்ஸ்புளோடர் ... 10
★ டப்பி மிதிவெடிகள் ... 98
★ டப்பி 2. 2 ரக மிதிவெடிகள் ... 85
★ பச்சை நிற காற்சட்டை ... 59
★ பச்சை நிற மேற்சட்டை. ... 133
★ உருமறைப்பு நீள காற்சட்டை ... 188
★ உருமறைப்பு மேற்சட்டை ... 172
★ கைக்கடிகாரங்கள் ... 04
★ சுசுக்கி 125 மோட்டார் சைக்கிள் ... 01
★ ஹொண்டா 175 ரக மோட்டார் சைக்கிள் ... 01
★ பணம் ரூபா ... 2, 18, 650
★ 12 w மின்கலப்பெட்டி ... 01
★ நடுத்தர ரவைகள் 50, 349
★ ஜி. பி. எம். ஜி. ரவைகள் லிங்குடன் 7, 585
★ ஸ்ரெச்சர் ... 01
★ ஈ. டி. பெரிது ... 05
★ சைகை பிளாஸ் ... 39
★ புகைக்குண்டு ... 02
★ கான் பரா லைற் ... 04
★ திசையறி கருவி ... 03
★ தலைக்கவசம் ... 111
★ பெரிய பற்றறி 120 அம். ... 03
★ சிறிய பற்றறி ... 01
★ ரி. வி. ... 02
★ ஏ. கே. கோல்சர் ... 105
★ தண்ணீர்க்கான் கோல்சர் ... 80
★ ரேப் செற் ... 03
★ டெக் ... 01
★ ஸ்ரபிலைசர் ... 02
★ ஓயில் கான் (சிங்கர்) ... 51
★ ஏ. கே. எல். எம். ஜி. கோல்சர் ... 69
★ தொப்பி ... 176
★ மிலிற்றறி சூ (சோடி) ... 257
★ மிலிற்றறி ஹிட்பாக் ... 57
★ சிவில் ஹிட்பாக் ... 75
★ சாதாரண சூ (சோடி) ... 168
★ தண்ணீர்க்கான் ... 77
★ சாப்பாட்டுப்பெட்டி ... 155
★ மிலிற்றறி பெல்ட் ... 60
★ கமெரா ... 04
★ மழைக்கவசம் ... 255
★ சப்ளை பாக் ... 62
★ சுவர்க்கடிகாரம் ... 01
★ வரைபட உறை ... 03
★ சிறிய கூடாரச் சீலை (ரென்ற்) ... 35
★ 50 கலிபர் ரவைகள் ... 657
★ ஏ. கே. எல். எம்.ஜி ரவைகள் லிங்குடன் .. 2394
★ பி. கே. எல். எம். ஜி. ரவைகள் ... 2102
★ 303 ரக ரவைகள் ... 1517
★ காட்ரிஜ் ... 250
★ நடுத்தர காஸ் ரவைகள் ... 23
★ 5 56 ரவைகள் ... 12
★ இரவுப் பார்வைகாட்டி ... 02
★ ஆர். பி ஜி. தொலைநோக்கி ... 08
★ 60 எம். எம். தொலைநோக்கிகள் ... 04
★ 60 எம். எம். புரொஜெக்ரர் ... 04
★ தொலைநோக்கிகள் ... 04
★ ஆர். பி. ஜி. றொட் ... 08
★ ஆர். பி. ஜி. பிரஸ் ... 06
★ 60 எம். எம். மோட்டார் துப்புரவாக்கி ... 04
★ ஏ. கே. எல். எம். ஜி. ரக துப்பாக்கி துப்புரவாக்கிகள் ... 13
★ ஏ. கே. எல். எம். ஜி. ரக துப்புரவாக்கி றொட் ... 12
★ ஏ. கே. துப்புரவாக்கி செற் ... 35
★ 60 எம். எம். மேலதிக சேர்ச் லைற் ... 02
★ டொங்கான் துப்புரவாக்கிகள் ... 02
★ பி. கே. துப்புரவாக்கி ... 01
★ ஏ. கே. எல். எம். ஜி. ரம் ரவைக்கூடு ... 51
★ 303 ரவைக்கூடுகள் ... 25
★ ஏ. கே. ரவைக் கூடுகள் ... 452
★ ரி - 81 ரக ரவைக் கூடுகள் ... 55
★ ரி - 81 ரக எல். எம். ஜி.ரவைக்கூடு ... 01
★ ரி - 81 ரக கத்தி ... 02
★ சாதாரண கத்திகள் ... 02
★ கிளைமோர் வெடிக்கவைக்கும் கருவி ... 01
★ துவிச்சக்கரவண்டி ... 01
★ மின்பிறப்பாக்கி ... 01
★ குண்டு துளைக்காத கவசம் ... 58

www.eelamview.com

# 'இதயபூமி - 1' இராணுவ நடவடிக்கையின் வெற்றிக்கு உயிர்தந்த பதின்மர்!

மணலாறு, அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மட்டும் சொந்தமல்ல. தமிழீழத்தின் எத்திசையில் இருப்பவர்களுக்கும் அந்தமண் சொந்தமண் எம் வீரகாவியத்தின் தலைவனைக் காத்துத்தந்த பூமி அது. இந்த உண்மை எம் வீரர்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளதும், தலைவன் எமது மண்ணில் கொண்ட தளராத பற்றும், அவனது வளர்ப்புக்களின் அயராத கடின பயிற்சியும், நிறைவாகும் வரை மறைவாக இருக்கும் விவேகமும் இதயபூமி நடவடிக்கையின் வெற்றிக்கு வழிசமைத்தவைகளாகும். இந்த வெற்றி வரலாற்றோடும், இதயத்தோடும், இதயபூமியோடும் இரண்டறக் கலந்துபோனவர்கள் தான்,

லெப். திருமலைநம்பி ( பெர்னாண்டோ )
லெப். நக்கீரன் ( செந்தூரன் )
லெப். காந்தி ( அழகப்பன் )
லெப். விமலன் ( வில்லவன் )
2ஆம் லெப். புகழரசன்
லெப். ஈழவேந்தன்
லெப். குயிலன்
லெப். வாசன்
லெப். விக்ரம்
2 ஆம் லெப். சியாமணி.

## லெப். திருமலைநம்பி – பெர்னாண்டோ

(வரப்பிரகாசம் யுக்தீபன்)
கொழும்புத்துறை - யாழ்ப்பாணம்.

ஹயசேன, மின்னல், சிக்சர், செவண்பவர் என்றெல்லாம் மணலாற்றில் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகளை முறியடித்தபோது எம்மோடு துணை நின்ற திருமலைநம்பியே! உன் மலைபோன்ற வீரத்தை நாம் மறந்துவிடமுடியுமா..... ?

மணலாறு தமிழீழத்தின் 'இதயம். என்பதை உன் இதயத்தில் பதித்து செயல்புரிந்த வீரனே! நீ பிறந்த மண் கொழும்புத்துறையா மணலாறா என்று தடுமாறவைத்தவனே! உன் உணர்வுகளை, உன் நினைவுகளை இலகுவில் அழித்துவிட முடியுமா......?

சண்டைக்குச் செல்லும் போதெல்லாம், " மச்சான் நான் இந்தச் சண்டையில செத்திடுவன்; நான் சண்டைபிடிச்சு செத்த முழு விபரத்தையும் வீட்டிலபோய் மறக்காமல் சொல்லிப்போடு" என்று கேட்பாய்.



பொறுப்பாளனென்பதை மறந்து தோழமையோடு பழகினாய். போர் வாழ்வில் உன்னுடன் வாழ்ந்த கால நினைவுகள் எண்ணில. அவற்றில் சிலவற்றைமட்டுமே நினைத்துப்பார்க்கும் சக்தி எனக்குண்டு. என் சக்திக்கு அப்பாற்பட்டவன் நீ. அதனால்தான் என்னை முந்தி சாதனை வரிகளில் பிறந்து நிற்கிறாய்.

மண்கிண்டிமுகாம் தகர்ப்புக்காகச் செல்லும்போது எம்மையெல்லாம் 'வீடியோ' படம் எடுத்ததும், அப்போது நீ சொன்னதையும நினைத்துப்பார்ககிறேன்.

'வீடியோ' கமெரா உன்னை நோக்கித் திரும்பியபோதெல்லாம் எழுந்து, எல்லோருக்கும் முன்னே வந்து நின்றாய். ''ஏன் மச்சான் எழும்பி முன்னுக்கு முன்னுக்குப் போய் நிற்கிறாய்'' என்று கேட்டேன்.

''நான் இந்தச் சண்டையில செத்தால் அண்ணன் என்னை அடிக்கடி போட்டுப் பாப்பாரில்லையா?'' என்று, பதில் சொன்னாய். தலைவன் உன் கடைசி வீரத்தைப் பார்க்கவேண்டுமென்று தீர்மானித்துத்தான் இதைச் சொன்னாயோ......?

நீ எழுந்ததும், இருந்ததும், விழுந்ததும இன்னும் என் மனத்திரையில்......


## லெப். நக்கீரன்–செந்தூரன்

(சோமசுந்தரம் அரசரத்தினம்)
பழுகாமம் - மட்டக்களப்பு.

நக்கீரா! நீ பிறந்த பழுகாமத்துக்கு இழுக்கு ஏற்படக்கூடாதென நினைத்த மறவனே! கடைசி நிமிடம் வரை உனக்கிருந்த மனக்குறையை வரிகளாக்கி, தமிழ் மக்களின் முன் வைக்கிறேன்.

''எல்லா தாய் தகப்பனும் வந்து வந்து தங்கட பிள்ளையள உயிரோட பாத்திட்டு போயிட்டாங்க; அம்மா மட்டும் ஏன் இன்னும் வரவில்லை; நான் இந்தச் சண்டையில செத்தா பொடியக்கூட பாக்க வரமாட்டாவா மச்சான்....." என்று, கடைசி நிமிடத்திலும் உன் மனதில் உறைந்து கிடந்த மனக்குறையை, ஏக்கத்தை வெளியிட்டாய். உன்னை உன் தாய் பார்க்கக் கொடுத்துவைக்காமல் போகலாம்; ஆனால் உன் வீரத்தைக கேட்டு நிச்சயம் கண்கலங்க, நிறைவு கொண்டிருப்பாள்.

நக்கீரா! உனக்கு உன் தாயைக் காணவில்லை என்று குறை. ஆனால் நாமெல்லாம் உன்னில்தானே எம் தாயைக் கண்டோம். உன் செயலில்தானே எம் தாயின் அன்பைப் பெற்றோம். நாம் காயப்பட்டிருந்த போதும், நோயுற்றிருந்த போதும் அருவருப்பின்றிக் காயம் கழுவியது... கருணையோடு பராமரித்தது...... இதைவிட உலகத்தில் உயர்ந்த பணி என்ன உண்டு? தாயிடந்தான் தூய அன்பைப் பெற முடியுமென நினைத்த எமக்கு, ஒரு



போராளியிடமும் அதைப் பெறமுடியுமென்பதை உணர்த்திவிட்டாய்; தாயை வென்றுவிட்டாய். தலைவன் சரியாகத்தான் வளர்த்தார் என்பதை நிலைநிறுத்திவிட்டாய்.

'மின்னல்' தாக்குதலில் காயமுற்ற நூற்றுக்கணக்கான போராளிகளுக்கு, ஓடி ஓடி நீசெய்த மருத்துவப்பணி சாதாரணமானதா....? எழுத்தில் வடிக்கக்கூடியதா......? சொல்லி முடிக்கக்கூடியதா......?


நக்கீரா! மற்றவர்கள் உன்னைப் பேசியபோதெல்லாம் மௌனமாக இருந்து பின் சிரித்துப் பேசுவாயே, அது எப்படி உன்னால் சாத்தியமானது! பொறுமையை உன்னிடமிருந்துதானே சிறிதளவாயினும் நான் கற்றுக்கொண்டேன்.

ஒரேயொருமுறை நீ கோபமுற்றதையும் எவருடனும் பேசாது மௌனமாக இருந்ததையும் கண்டிருககிறேன். 'செவண்பவர்' இராணுவ நடவடிக்கையை முறியடிக்கச் சென்ற படையணியில் இடம் பெறமுடியாது போனபோது. உனக்கு எவ்வளவு கோபம் வந்தது தெரியுமா......?அன்றுதான் நீ நக்கீரனாய் நின்றாய் உன் ஈரநெஞ்சிலும் கனல் பறப்பதை அன்றுதான் கண்டேன். சண்டைக்குச் செல்லவிடாததுதான் உனது கோபத்துக்குக் காரணம். நியாயமான கோபந்தான். ஆனால் ஒன் பெரும் பணியொன்றினைக் கருதியே, தளபதி உன்னை அக்களத்துக்கு அனுப்பவில்லையென்பதை அறிந்து, கண் கலங்கி நீ நின்ற நாளையும் நான் மறந்துவிடவில்லை.

'இதயபூமி' தாக்குதல் நடவடிக்கைக்கான பயிற்சி நடந்து கொண்டிருந்தபோது செத்துவிழுவதாக நடித்ததும், விழுந்த உன்னை நான் தூக்கிச் சென்றதும், பின் பொத்தென நிலத்தில் போட்டதும் நிஜமாக மாறிவிடும் என்று, நான் நினைக்கவில்லையடா!

தாக்குதலுக்குப் புறப்படும்போது ''என்ன, நக்கீரன்ர முகம் வித்தியாசமாய்க் கிடக்கு;சாகப்போறான் போல கிடக்குது'' என்று நான் சொன்னதும்...... சொன்னது நிகழ்ந்ததும்......

ஒரு தாயை இழந்துவிட்டோம். உணர்கின்றோம். ஆனால், உன் உயிர் இதயபூமியை புனிதமாக்கி விட்டது. அங்கே உன்குருதியால் பதிந்த புதியவரலாற்றுவரிகள்......!



'இதயபூமி - 1' சண்டை முனையில், எமதியக்கத்தின் படைத்துறைத் துணைத்தளபதி திரு. பால்ராஜ் அவர்களுடன், முல்லை (மணலாறு) மாவட்ட சிறப்புத் தளபதி திரு. அன்பு (இடது), வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி திரு. தீபன் ஆகியோர்.

www.eelamview.com

### லெப். காந்தி - அழகப்பன்
(கபிரியல்பிள்ளை யோதிகாவலன்)
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

பெற்ற தாயும், இரத்தத்தில் உற்ற உறவினரும் பிறந்த பொன்னாட்டைவிட்டுச் சென்றபோதும், 'தாயகமண்ணின் காற்று என் உடலைத் தழுவவேண்டும்; வீழும் என் உடலில் பிறந்த பொன்னாடு புகழ்பெறவேண்டும்; போகும் உயிரும் பாயும் குருதியும் வீசும் காற்



றாய், [முளைவிடும் 'தளையின் நீராய் மாறவேண்டும்' என்று கருதி களம் புகுந்தவன் காந்தி.

ஆற்றலுள்ள தலைவன் காலத்தில் மானத்தை நிலைநாட்டிவிட வேண்டுமென்ற துடிப்போடு, இதயபூமியில் கால் பதித்தான்.

கிடைத்தது சிறிதாயினும் கொடுத்துண்டு வாழ்வது தமிழன் பண்பு. தமிழிலக்கியங்களில் இதைப் படித்திருக்கின்றேன். இக்கருத்தின் நிஜத்தை காந்தியில் கண்டிருக்கின்றேன். சாப்பிட அமர்ந்தால் சூழ இருக்கும் தன் தோழர்களுக்கு ஒவ்வொரு பிடி கொடுக்காவிட்டால், இவனுக்குச் சாப்பாடு இறங்காது. தனக்கு குறைவயிறாகிப் போய் விடுமேயென்று ஒருபோதும் நினைத்திருக்க மாட்டான்.

பணிவும் இன்சொல்லும் காந்தியின் அணிகலன்கள். பேச்சில் இனிமை, செயலில் கனிவு நிறைந்த காந்தி களத்தில் தன் துணிவைக் காட்ட ஒருபோதும் பின்நின்றதில்லை. மணலாறு கண்ட களமெல்லாம் வீரவிளையாட்டில் இறங்கியவன்.

'இதயபூமி - 1' தாக்குதலுக்குச் செல்லும் முன், 'நல்ல கடல் குளிப்பொன்று குளிக்கோணு'மெனச் சொல்லி, நாயாற்றுக்கடலில் குளிக்கச் சென்றோம். ''மச்சான், இது கடைசிக் குளிப்பாயிருக்குமெண்டு நினைக்கிறன்'' என்று, குளித்துக் கொண்டிருக்கும் போது சொன்ன அவனது வார்த்தையில், எவ்வளவு தீர்க்கதரிசனமிருந்தது!

கடைசி நாள்; சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். வழமைபோல் காந்தியும் சாப்பிட அமர்ந்தான். அதுதான் அவன் எம்மோடு பகிர்ந்துண்ட கடைசி நாள்.

''மச்சான், எல்லா மாவட்டப் பெடியளும் இந்த சண்டைக்கு வந்திருக்கிறதால, நாங்கள் எங்கட கடைசிப் பவறினை சண்டையில காட்டோணும்; மணலாற்றைப் பற்றிநிக்கிற புகழை நிலை நாட்டிப்போடோணும்'' என்று சொல்லிய போது, எவ்வளவு உறுதியிருந்தது!

காந்தி நிச்சயம் சாந்தி கொண்டே கண்மூடியிருப்பான். ஐந்தே நிமிடத்தில், மண்கிண்டி பிரதான முகாமுக்கு முன் காப்பாய் இருந்த மினிமுகாமைத் தாக்கியழித்து முன்னேறிய போது ... அந்தக் கடைசிநிமிடத்தில்பெருமையோடு உறங்கிய உன்விழிகள் ......!


### லெப். விமலன் – வில்லவன்
(கிருஷ்ணபிள்ளை புண்ணியமூர்த்தி)
வீரமகாநாடு, மூதூர்.

விமலா! மன்னாரிலிருந்து வந்த நான், தோப்பூரிலிருந்து வந்த உன்னை மணலாற்று மண்ணில் சந்திக்கின்றேன். வடக்கிலிருந்து வந்த நானும் கிழக்கிலிருந்து வந்த நீயும் இதயபூமியில் இணைந்து வாழ்ந்தகால நினைவுகள் இனிமையானவை. ஆனால், 'இதயபூமி -1' தாக்குதல் நடவடிக்கையில் நீ பிரிந்தபோது, துயரம் நிறைந்து துடிக்கின்றேன்.

விடிகின்ற ஒரு வரலாற்றில் உன் முடிவை எழுதிக்கொண்டதை நினைத்து, பெருமையில் விம்மிப் புடைக்கின்றேன். ஆனாலும், என்னைவிட்டு எப்படி உன்னால் புகழின் உச்சிக்குச் செல்ல மனம் வந்தது? அதை நினைக்கும்போது உன்மீது பொறாமையும் ஏற்படுகின்றது.

சிங்கள இராணுவத் தளபதிகளைக் குழப்பி நிலைகுலைய வைத்த 'இதயபூமி - 1' நடவடிக்கையில் மரணித்த உன் வீரவரலாற்றை, எம் தலைவன் புரட்டிப் பார்க்கின்றான். நீ பாக்கியசாலி; அவர் நெஞ்சில் உயர்ந்து நிற்குமளவிற்கு சாதனை வீரனாகிவிட்டாய்.

நீ தோப்பூரில் பயிற்சி முடித்ததும், அங்கேயே களம்பல கண்ட




தும், விழுப்புண் சுமந்ததும், மணலாற்றுக்கு வந்த ஒருமாதகால நடைப் பயணத்தில் துயர்கள் பலவற்றைச்சந்தித்ததும், மணலாற்றுப் பாசறை வாழ்வில் தினமும் கதையாகச் சொன்னபோது கேட்டிருக்கின்றேன். மிகக் குறைந்த வயதில் விடுதலைக்கு உன்னை அர்ப்பணிக்கத் துணிந்ததை நினைத்துப் பெருமைப்படுகின்றேன்.

மண்கிண்டி இராணுவ முகாம் தகர்ப்புக்குச் சென்ற அன்றைய இரவு, நீ ஆணித்தரமாகச் சொன்ன வார்த்தைகள் நெஞ்சில் நிற்கின்றன.

''இந்த இடத்தில் எங்கட எத்தின பெடியளப் பறிகொடுத்திருக்கிறம்; இந்த முகாமை அழிச்சு எங்கட கொடியினை இதில பறக்கவிடோணும்'' என்று கூறி, ஆக்கிரோஷத்துடன் முகாமிற்குள் பாய்ந்து தாக்கினாய். அணியணியாய் எம்வீரர்கள் முகாமிற்குள் பாய்வதற்கு வழியமைத்துக் கொடுத்த நீ........

மண்கிண்டியின் உச்சியில் கொடி பறந்தது. மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள உன்னைத் தேடினேன். ஆனால் நீ ... மௌனமாகக் கிடந்த உன்னைத் தூக்கி தோளில் சுமந்து......



புலிகளுக்கு எதிரான சண்டைகளில் சிங்களப் படைகளுக்கு உதவிய சக்திமிக்க இத் தொடர்புசாதனங்கள் இப்போது புலிகளிடம். இனி, சிங்களப் படைகளுக்கு எதிரான சண்டைகளில் இவை புலிகளுக்கு உதவும்.

### லெப். துரைக்கண்ணன் – விக்ரம்
(வைத்தியலிங்கம் தயாநந்தன்)
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

அரசியல்ஞானம், கலைஞானம், போர்த்திறன் என மூன்று திறமைகளும் ஒரு மனிதனிடம் கூடிப் பிறப்பது அரிது. எமது தலைவனிடத்தில் நிறைந்துகிடக்கின்ற இந்தத் திறமைகள், அவரது வளர்ப்புக்களிடம் குறைவின்றிக் காணப்பட்டாலும், சிலரிடமே முழுமையாகக் கிடக்கின்றன. துரைக்கண்ணனிடம் இந்தத் திறமைகளின் நிறைவைக் கண்டிருக்கின்றேன்.

சினம், கோபம், குரோதம் எப்படியென்பதை அறியாத பொறுமைசாலி. பொறுப்பாளன் என்பதை மனதிற்கொண்டு கண்டிப்புடன் நடந்துகொள்ளாமல் அன்பில் வழிப்படுத்தும் பண்பாளன்.

தற்பெருமை, தற்புகழ்ச்சிகளை விரும்பாத குணசீலன். சகதோழர்களுக்கு வித்தைகள் செய்துகாட்டி, மகிழவைக்கும் வித்தகன். களங்களில் விழுப்புண் சுமந்த துணிவாளன். மைதானத்தில் இறங்கினால் போட்டியாளன் கலங்கும் விளையாட்டு வீரன். எடுத்த எடுப்பில் மேடையில் ஏறி நாடகமோ, கவிதையோ வடித்துக்காட்டும் கலைஞன். சுருக்கமாகச் சொன்னால், துரைக்கண்ணன் ஒரு சகலகலாவல்லவன்.

துரைக்கண்ணனின் இந்த உயர், குணங்கள் போராளிகள் அனைவரையும் கவர்ந்தன; அவனைச் சுற்றி ஒரு கூட்டம் எப்போதுமே மொய்த்திருக்கும். விக்ரம் என்றால் வன்னியில் தெரியாத போராளிகள் இல்லை. போராட்ட வாழ்வில் அவனுடன் வாழ்ந்த நாட்களை



நினைத்துப் பார்க்கிறேன். ஒவ்வொரு நாளுமே பசுமையாய் இனிமையாய்த் தெரிகின்றது.

பாசறையில் அவனில்லாத கலைமண்டபம் வெறிச்சோடிக் கிடப்பதைப் பார்க்கின்றேன். கண்மூடினால் கனவெல்லாம் அவனுடன் சேர்ந்து நாடகம் நடிக்கின்றேன். ஒவ்வொரு மாவீரரைப்பற்றியும் கவிதையோ 'விழுதுகளோ' எழுதிப் படித்துக் காட்டிவிட்டு, ''பிழையிருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு மேடையிலிருந்து இறங்கி வருவது போன்ற பிரமை.

காலையில் கண்விழிக்கும்போது, பாரம் தூக்கும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் துரைக்கண்ணனே முன்னால் நிற்பான்.

''எப்பிடி மச்சான், நெஞ்சு அகலமாகியிருக்குதோ? 'வீ கட்' அடிக்கிறதா?'' என்று கேட்பான்.

''ஏன்மச்சான் இப்படிக் கஸ்ரப்படுகிறாய்'' என்று கேட்டால், 'கனரக ஆயுதங்களைத் தூக்கிவச்சு அடிபடோணுமெண்டால்' சும்மாயிருந்தால் சரிவருமே மச்சான்'' என்று பதிலிறுப்பான்.

'வீட்டுக்கொரு புலிவரணும்' என்ற பாடலை எந்தநேரமும் இவனது வாய் முணுமுணுத்துக் கொண்டிருக்கும்.

வட்டக்கச்சியில் தாயும் தந்தையும் சகோதரியும் வறுமையால்

www.eelamview.com

வாடியபோதும், துரைக்கண்ணன் அதைநெஞ்சில் போட்டுக் கொண்டதில்லை. போராட்டத்துடன் ஊறிப்போன தன் குடும்பத்தவர்கள், தான் துண்டு கொடுத்து வந்திடுவன் என்று பயப்பிடாமல் இருக்கவேண்டுமெனக்கூறி, கவிதைகள் எழுதி வீட்டுக்கு அனுப்புவான். உறுதிமிக்க வீரனை - பாசம்மிக்க நண்பனை - இழந்துவிட்டதை நினைக்கும்போது நெஞ்சு முட்டுகின்றது.

மண்கிண்டி இராணுவ முகாம் தகர்ப்புக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தபோது என் அருகே ஓடிவந்தான்.

''மச்சான், இந்தச் சண்டையில் தப்பினா மணலாற்றில் நின்ற நாட்களைப்பற்றி ஒரு நாடகம் எழுதி, நடிப்பம்; நான் செத்திட்டா என்னைப்பற்றி கவிதை எழுதி வாசித்துவிடு - விழுதுகள் எழுதிக் கொடுத்துவிடு'' என்று சொன்னதை நினைக்கும்போதெல்லாம், மனம்விட்டு அழவேண்டும் போலுள்ளது.

போர்வாழ்வில் இன்னும் அவன் சேவைகள் இருக்க வேண்டுமென நினைத்தோம், தன் சேவை போதுமென்று கருதிப் போய்விட்டான்......!

## 2 ஆம் லெப். சியாமணி

*(யோகச்சந்திரன் ரவிசங்கர்)*
திருக்கோணமலை.

பிறந்த மண்ணில், இருந்தால் குற்றம்; சிரித்தால் குற்றம்; கதைத்தால் குற்றம். தொடர்ந்தும் திருமலை நகரில் வாழ்வதா அல்லது வீணே சாவதுதான் முடிவா என்ற கேள்விக்கு, விடைகாண முடியவில்லை. தாமதித்தால் சாவு நிச்சயம் என்ற உண்மை 1990 இன் பிற்பகுதியில் ஏற்படத் தொடங்கியது அங்கிருந்து வெளியேறுவது என்ற முடிவோடு படகேறினான் சியாமணி.

வாள்வெட்டுக்கும் கடற்படையின் பீரங்கிக்கும் இரையாகாமல் எஞ்சிவந்த படகுகள், மணலாற்றுக் கரையைத் தொட்டன. படகிலிருந்து கரையிறங்கிய அன்றே, தென்தமிழீழத்தில் நாம் வாழவேண்டுமாயின், மணலாறு சுதந்திரப் பூமியாக இருக்க வேண்டுமென்ற உணர்வு, அவனிடம் கருக்கொண்டது.

முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேச சுதந்திரபுரம் கிராமம், அவனது தாய்தந்தையரின் இருப்பிடமாகியது. குழந்தையுள்ளம் மாறாத வயது. கண்முன் நிகழ்ந்து முடிந்த கோரநிகழ்வுகள் அவனுள்ளத்தைப் பெரிதும் பாதித்திருந்தன.

படுத்து கண்ணுறங்கமுற்பட்டால் வீடுகள் எரிவது, குழந்தைகள் - பெண்கள் வாள் வெட்டுக்கு இரையாகித் துடிப்பது எல்லாம் நினைவுத் தொடராய் வந்து, அவனைத் துன்புறுத்தின.

இரவு பகலாக பலநாள் அழுதிருக்கின்றான். தூக்கத்தில் விழித்திருந்து அழுவதைவிட, விடுதலைப் போரில் விடிவுக்கு வழியமைத்து நிரந்தரமாகத் தூங்குவது மேல், என்ற முடிவோடு பாசறை தேடினான்.

பாசறையில், பயிற்சிக்காலம் அவனுக்குத் துன்பமாகப்படவில்லை. ஏனெனில், அதைமிஞ்சிய துன்பங்களை அவன் சந்தித்துவிட்டான். போர்வாழ்வு அவனுக்கு அமைதியைக் கொடுத்தது.

மணலாற்றில் 'இதயபூமி-1' தாக்குதலுக்கு வன்னியிலிருந்து புறப்பட்ட அணியில் தானும் இடம் பெற்றது, மனதில் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

நடு இரவு. தாக்குதலுக்குச் சில நிமிடங்களே இருந்தன. மண்கிண்டி முகாம் அவன் கண்களில் துல்லியமாய்த் தெரிந்தது. மனத்திரையில் வாள்வெட்டு...... வீடெரிப்பு—... உடலில் வெப்பம் அதிகரிக்கத் தொடங்கியது. இத்தாக்குதலின் வெற்றி தென்தமிழீழப் போருக்கு உத்வேகம் கொடுக்கும் என்ற உணர்வு மேலோங்கியது.

தாக்குதல் தொடங்கியது. சியாமணி மின்னலாய்ப் பாய்ந்தான். எங்கும் ஒரே முழக்கம். வெற்றி



யின் ஆரவாரம். முகாம் தகர்ந்தது. தமிழ்த்தாய் தன்னைக் கைநீட்டி அழைப்பது, சியாமணியின் கண்களுக்குத் தெரிகிறது. தாயின் மடியில் அவன் நிரந்தரத் தூக்கத்துக்குத் தயாராகிவிட்டான். சியாமணியைத் தூக்கி என் தோளில் சுமந்து கொண்டு.........

## லெப். ஈழவேந்தன் - அமீர்

*(கந்தசாமி விமலேந்திரன்)*
கனகராயன்குளம், வவுனியா.

கிராமியத்துக்குரிய மிடுக்கு, தோற்றம் அனைத்தும் நிறைந்தவன் ஈழவேந்தன். ஈழவேந்தனால் அவன் பிறந்த கனகராயன்குளம் புனிதமடைகின்றது. அவனால் அவன் பிறந்த மண்ணுக்குப் பெருமை; அந்த மண்ணில் பிறந்ததால் அவனுக்குப் பெருமை; ஒரு வீரப்புதல்வனைப் பெற்றதால் அவன் பெற்றோர்க்குப் பெருமை.

மணலாற்றுக் காட்டின் போர்ப் பாசறையில் போர்க்கலை பயின்ற ஈழவேந்தனுக்கு வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பிரதேசங்களில் களமுனைகள் கிடைத்தன.

பொறுமையும், பொறுப்பும், செயல்திறனும் இவனிடம் குறைவின்றி இருந்தன. கோபத்தை அடக்கியாளும் வல்லமையும் அதிகமுடைய இவனது முகத்தில், இனம் புரியாத சோகமொன்று என்றும் இழையோடிக் கிடக்கும். யாரிடமும் அதைச் சொல்லிப் பகிர்ந்துகொண்டதில்லை.

ஈழவேந்தன் சென்ற போர்க் களங்கள் பலவாக இருந்தாலும்,



வெற்றியைக் குவித்த களங்கள் சிலவுண்டு. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை:

1991 ஆம் ஆண்டு மாசித்திங்களில் முல்லைத்தீவு இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண்களைத் தாக்கி அழித்து, பன்னிரண்டு எஃப். என். சி., மூன்று மினிமினி எல்.எம்.ஜி.துப்பாக்கிகள் உள்ளிட்ட பலஆயுதங்களைக் கைப்பற்றியமை.

1992 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில், முல்லைத்தீவு இராணுவ முகாமின் முக்கிய காப்பரண்களைத் தாக்கி, 50 கலிபர் துப்பாக்கி உள்ளிட்ட பல ஆயுதங்களைக் கைப்பற்றியமை.

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு.

மணலாற்றில், தலைவனின் காலடியில் பயிற்சிபெறும் வாய்ப்புக் கிட்டியபோதே, மணலாற்றின் முக்கியத்துவம் இவன் நெஞ்சில் பதிந்து கொண்டது. 'இதயபூமி-1' தாக்குதல் நடவடிக்கைக்கு, வன்னியிலிருந்து புறப்பட்ட அணியில் இடம் பெற்றபோதே, மணலாற்றுப் பயிற்சிக்கால நினைவுகள் அவன்மனதில் நிழலாடத் தொடங்கின. அன்று மனதில் ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியால், தன்மனதில் உறைந்துகிடந்த சோகத்தையும் வாய்விட்டுக் கூறினான்.

''வீட்டில சரியான கஸ்ரம் மச்சான். இந்த சண்டையில பெரிய சாதனைய நிலை நாட்டோணும். உயிரோட திரும்பிவந்தால், வீட்டுக்கஸ்ரத்தைச் சொல்லி வீட்ட ஒரு தடவை போய்ப்பார்த்து, உதவி செய்துவிட்டு வரலாம்'' என்று சொல்லி, வீட்டு நிலைபற்றி மனம் விட்டுப் பேசினான். அவன் சொல்லியபடி சண்டையில் சாதனை நிலை நாட்டினான். ஆனால் வீட்டுக்குப் போகுமுன் நாட்டுக்காய் விடைபெற்றுக்கொண்டான்......!

## லெப். குயிலன்


*(சிவப்பிரகாசம் சாந்தகுமார்)*
மூளாய் தெற்கு, யாழ்ப்பாணம்.

யாழ். மண்ணிலிருந்து மணலாற்றுக்கு வந்தபோது, மணலாற்றுக் காடுகளும், பறவைகளும் குயிலனுக்குப் புதிய அனுபவங்களாயின. இலகுவான வாழ்க்கை முறையிலிருந்து கடினமான வாழ்க்கை முறைக்கு அடியெடுத்துவைக்கும் போது, துன்ப அத்தியாயங்கள் அதிகமிருந்தபோதும், இராணுவத்தால் அனுபவித்த துன்பங்களின் முன்னே இது துரும்பாகத் தெரிந்தது குயிலனுக்கு.

ஏழாவது பயிற்சிப் பாசறையில் பயிற்சிமுடித்தகையோடு, முல்லைத்தீவில் இலங்கை இராணுவ முகாம் மீதான தாக்குதற்களம் காத்துக் கிடந்தது. மிதிவெடிவைக்கும் திறமை மிகுதியாக இருந்ததால், அதற்கான சிறப்புப் பயிற்சியோடு களத்துக்கு விரைந்தான்.

மிதிவெடிவைக்கும் பணியில் குயிலனது வலதுகரம் போனதும், யாழ். சென்று சிகிச்சை பெற்றதும், ஒரு கரத்துடன் என்முன் வந்துநின்றதும், ஒரு சோகம்கலந்த வீர வரலாறு.

கரமொன்று போனபின் சண்டை செய்ய வேண்டுமென்ற துடிப்பு குயிலனிடம் மேலோங்கியது. தனது உள்ளக்கிடக்கையைத் தளபதியிடம் வாய்விட்டுக் கேட்டுவிட்டான். தளபதியும் அவனது ஆசைக்குத் தடைபோடவில்லை. ஆனால் அவனது பொறுப்புணர்ச்சியைக் கருத்திற்கொண்டு, அணியொன்றின் பொறுப்பாளனாக நியமித்தார். பொறுப்பாளனாக இருக்க விரும்பாத குயிலன், சாதாரண வீரனாயிருந்து இரண்டு மூன்று சண்டை



மணலாற்றில் தமிழர் வீடுகளை அழிக்கச் சிங்களப்படை உபயோகித்த புல்டோசரைக் கைப் பற்றிய புலிகள், சிங்களப்படையின் தளத்தை அழிக்கின்றனர்.

www.eelamview.com

கள் செய்தபின், பொறுப்பாளனாக வருவதையே விரும்பினான். அதையும் வெளிப்படையாகவே கேட்டுக்கொண்டான். வேண்டுதல் நிறைவேற்றப்பட்டது.

குயிலன், மணலாற்றில் பெரும்பாலான களங்களில் மனமாரச் சண்டை செய்தாலும், சில சண்டைகளுக்கு தன்னைக் கூட்டிச் செல்லாததையிட்டுக் குறைப்பட்டிருக்கின்றான்-அழுதிருக்கின்றான்; அழுதாவது சண்டைக்குச் செலல அனுமதி எடுத்துவிட வேண்டுமென்ற சண்டைக்காரன் குயிலன்.



'இதயபூமி - 1' நடவடிக்கைக்கான பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, குயிலன் சலிப்பும் களைப்புமின்றி பயிற்சியிலீடுபட்டான். இயலாவாளி என்று தன்னைக் கூட்டிச்செல்லாமல் விட்டுவிடுவார்களோ என்ற சந்தேகம் அவனுக்கு.

பயிற்சி முடிந்து அணிகள் வகுக்கப்பட்ட போது, தளபதியின் கை தன்னை நோக்கி அசையுமா என்ற ஆவலோடு இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். அசைந்தது! குயிலனின் மகிழ்ச்சிக்கு அளவில்லை. அந்த மகிழ்ச்சியில் அவன் அடித்த மரியாதை வணக்கம், இன்னும் கண்முன் நிற்கிறது!

## லெப். வாசன் – தமிழ்வாணன்

*(செல்லையா வேதா)*
கோயில்போரதீவு, மட்டக்களப்பு.

தென்தமிழீழத்தில், கோவில் போரதீவு கிராமத்தில் பிறந்தவன் வாசன். இராணுவத்துக்கு அஞ்சி காடுகளில் உறங்கி வாழ்ந்தது - பள்ளிக்குச் செல்லமுடியாது படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தது - துடிக்கத் துடிக்க வாள்வெட்டுக்கு இலக்காகிய இளைஞர்கள் - இராணுவ முகாம்களில் தூங்கிய தமிழரின் எலும்புக்கூடுகள் - கோரமாய் நடந்த பாலியல் வன்முறைகளையெல்லாம் வாசனால் எப்படி மறக்கமுடியும்? இராணுவத்தை அழிக்கவேண்டுமென்பதை விட, அவர்களின் தலையை வெட்ட வேண்டும - அவர்களின் தலை துடிப்பதைப் பார்க்கவேண்டும் - என்ற ஆத்திரம் தன்னுள் நாளுக்கு நாள் அதிகரித்தபோதே களத்துக்கு வந்தவன்

மணலாற்றுப் போர்வாழ்வில் தென்தமிழீழத்தில் நடக்கும் இராணுவ வெறியாட்டம் பற்றியே அடிக்கடி கதைத்துக்கொண்டிருப்பான். குழந்தைத்தனமான குறும்புகள் இவனிடம் இல்லாமலில்லை. பிறந்த மண்ணில், சுதந்திரமாகச் செய்யமுடியாத குறும்புகளை, தன்னை நேசித்த தோழர்களோடு செய்யநினைத்ததில் தவறில்லை, குறும்புத்தனம் இவனிடம் இருந்தாலும் சண்டையில் இராணுவத்தைச் சுட்டுக் குவிக்கவேண்டும்; சுடுவது மட்டுமல்ல வெட்டவேண்டும்



என்ற வன்மமும் தலையெடுத்துவிடும்.

கனரக ஆயுதம் வைத்து அடிபடவேண்டுமெனத் தளபதியிடம் வேண்டி ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கி பெற்றுக்கொண்டான். இறுக்கமான உடற்கட்டும் - வலிமையும் - வன்மமும் - இத்துப்பாக்கியை வைத்திருக்கும் தகுதியை, இவனுக்குக் கொடுத்தன.

சண்டைகளுக்குச்செல்லத்தயாராகும்போது, கூரிய தனது கத்தியை உறைக்குள் முதலில் போட்டுக் கொள்வான். "என்ன மச்சான் கத்தியைக் கவனமாய்ச் செருகிறாய்" என்று கேட்டால்,

"கண்ணுக்கு முன்னால எத்தனை தலையை ஆமி வெட்டியிருக்கிறான். துடிக்கத் துடிக்க வெட்டிய நாய்களை சும்மாவிடக் கூடாது தான" என்று பதில் சொல்வான்.

'இதயபூமி - 1' தாக்குதலுக்கு அணிவகுத்துச் சென்றபோது துடிப்புடன் - மிடுக்குடன் - இராஜநடை போட்டு நடந்து சென்ற காட்சி......
இலகு இயந்திரத் துப்பாக்கியை அணைத்தபடி, மலர்ந்த முகத்தோடு, செந்நீரால் வீரகாவியம் எழுதி விழிமூடிக்கிடந்த காட்சி ...!

## 2 ஆவது லெப். புகழரசன்

*(சின்னத்துரை கோணேஸ்வரன்)*
காரைநகர், யாழ்ப்பாணம்.

யாழ். மண்ணில் காரைநகர் தந்த புதல்வன் புகழரசன். தான் பிறந்த மண்ணில் சிங்களப்படைகள் ஆதிக்கம் செலுத்துவதும், பிறந்தகத்தைவிட்டு இடம் பெயர்ந்துவாழும் தாய் தந்தையர் வறுமையால் நொந்து தவிப்பதும், புகழரசனின் நெஞ்சில் நெருப்பை மூட்டின. சிங்களத்தின் கொடுமைகள்கண்டு கொதிப்பதா? வறுமையின் நிலைகண்டு வாய்விட்டு அழுவதா......?

அழுவதற்கு அவன் தயாரில்லை. தன்மான உணர்வோடு களப்பலி எடுக்கவேண்டுமென்ற சினம் ஓங்கி நின்றது. பயிற்சிக் காலத்தில் வீட்டு வறுமை நிலைபற்றி அடிக்கடி சொல்லிக்கொள்வான். வறுமை அவனுள்ளத்தில் 'ஒரு போராட்




டத்தை எழுப்பியுள்ளதை உணர்ந்து கொண்டேன்.

மட்டக்களப்பில் உணவின்றி, உடையின்றி, இருப்பிடவசதியின்றித் தவிக்கும் தம் தாய் தந்தையர் துயர்பற்றிச் சகதோழர்கள் கூறும் சோகக்கதைகளைக் கேட்கும்போது, புகழரசன் மன ஆறுதல் கொண்டான்.

காலத்துக்கேற்ப, நேரத்துக்கேற்ப, இடத்துக்கேற்ப தோழர்களோடு பழகிவிட்டு ஏனைய நேரங்களில் அமைதியாக இருப்பதையே விரும்பினான் புகழரசன். இவனுள்ளத்தில் இசைவெள்ளம் நிறைந்துகிடப்பது எவருக்கும் தெரியாது. அமைதியாக இருந்த அவனைத் தட்டியெழுப்பிப் பாடவைத்த நாள், நெஞ்சில் நிலையாய் நிற்கிறது. புகழரசன் நல்லாய்ப் பாடுவான் என்ற உண்மை தெரிந்தும் தோழர்கள் சும்மாவிடுவார்களா? அவனைச்சுற்றி என்றும் ஒரு கூட்டம் மொய்த்திருக்கும்.

புகழரசனின் போர்வாழ்வு குறுகியது. குறுகியகாலப் போர் வாழ்வில் நிறைவான வரலாற்றுப்பதிவை ஏற்படுத்திக்கொண்டான். மண்கிண்டி இராணுவ முகாமைத் தகர்த்தெறிந்து இதயபூமிக்கு உயிரூட்ட உயிர்கொடுத்த உத்தம வீரர்களின் வரிசையில், தன்னையும் இணைத்துக்கொண்டான்.

வதைபடுவதைவிட மானத்துடன் புதைபடுவதுமேல் என்று கருதி விழிதூங்க மறந்த புகழரசன், நிலையான தூக்கத்தோடு வரலாறாகிவிட்டான். அவனிசைத்த கானங்கள், கானகமெங்கும் ஒலிப்பதை உணர்கின்றேன்...... காரைநகர் தந்த கானகக்குயிலின் மானம் இந்த மண்ணில் என்றும் வாழும்!



மண்கிண்டிமலை வெற்றிப் பூரிப்பில் முல்லை (மணலாறு) மாவட்ட சிறப்புத் தளபதி திரு. அன்பு அவர்கள்.

இதயபூமியில் ஒரு போராளியின் குரல்...!

# எங்கள் மணலாறை பகையாள விடுவோமா?

நல்ல மணலதுவாம் நாற்புறமும் ஆறதுவாம்
பொங்கு தமிழரின் பழமை நாடதுவாம்.
தெங்கு தேன்வயலும் பொங்கும் கடல் வனமும்
கொண்ட மணலாற்றை பகையாள விடுவோமா?

எங்கள் பூமியிலே ஏர்பிடித்து உழுதவயல்
துலாமிதித்து நீரிறைத்து போரடித்த வயல்தன்னை
பங்கம் செய வந்த பாதகக் காடையர்கள்
ஏற்றிய குடியதனால் மாண்டது எங்கள் மண்.

தங்கத் தமிழனவன் தலையொன்று சாயுமெனில்
துட்டகைமுனுவாரின் பலதலைகள் சாயுமென
எழுந்துவிட்ட புலித் தானைகள் காலமதில்
பொங்கு தமிழர்கள் எல்லையில் நின்றனர்;
ஏற்றிய குடியினை தாக்கியே அழித்தனர்.

ஈழத்தமிழரின் இதய பூமியதாம்
பொங்கிக் கரைபுரளும் எங்கள் மணலாற்றில்
தானைத் தலைவனவன் உலவிவந்த வனமதிலே
பாரதப் படைகளவர் கால்பதித்த வேளைதனில்
பாதத்தை இழந்தகதை பாரெல்லாம் தெரிந்தகதை.

கூரான வாளதனைப் பையைவிட்டு எடுத்துவிட்டால்
செந்நீர் காணாமல் வையோமெனச் செப்பிவந்து
கூரான வாள்களதை குர்க்காஸ் படையினர்கள
புதர்களில் ஒளித்தகதை சிறுபுழுவும் கூறும் கதை.

தோள்மீது பொதிசுமந்து தூரமாக அவர் நடந்து
குழிதோண்டி நீர் குடித்து மண்காக்க மாண்ட
மாவீரர் கதைகளை லங்காப்படையினரே உனக்குத்தெரியாதோ?
தெரிந்தும்தான் வந்தீரோ? வந்துந்தான் பார்த்தீரோ?

வடக்குக் கிழக்கதனை பிரிக்க ஒருவேலி
போடத்தான் வந்தீரோ? வந்தும்தான் பார்த்தீரோ?
காட்டுப்புலிகளவர் கடமைதனில் தளராமல்
வேலிகளை சாய்த்திடவே சரிந்துதான் வீழ்ந்தீரோ?
அக்கிரமப் படையினரே இக்கணமே உணர்ந்துவிடு
மீண்டுமொருதடவை எம் மண்ணில் புகநினைத்தால்
சரித்திரத்தில் எழுதப்படும் சமரொன்றை நீ காண்பாய்.
ஆயிரமாய் உன்தலை உருளும் இதுஉறுதி.

— கோபி

www.eelamview.com

# மண்கிண்டிமலையில் மண்கவ்விய இராணுவம்

## சிங்களதேசத்துப் பத்திரிகைகளின் ஒப்பாரி

- வெட்கத்துக்குரிய நாள் (Day of Shame)
- விழித்தெழு! (Wake up)
- ஜானகபுரவில் பின்னடைவு ( Setback at Janakapura )
- எது பிழையாகிப் போனது? (What went wrong?)
- ஜானகபுரவில் இருந்து சாம்பல்கள் (Ashes from Janakapura)
- வேட்டைக்காரர்கள் இப்போது வேட்டையாடப்படுகின்றார்கள் (Hunters now hunted)
- ஜானகபுரவின் அவல நாள் (Janakapura's Day of the Jackal)

மண்கிண்டிமலை முகாம் வீழ்ச்சியை, மேற்குறித்த தலையங்கங்கள்மூலம் சிறீலங்காவின் ஆங்கிலப் பத்திரிகைகள் மதிப்பீடுசெய்துள்ளன. (மண்கிண்டிமலை என்ற பழந்தமிழ்க் கிராமத்திற்கு 'ஜானகபுர' என்ற பெயரைச் சூட்டிய சிங்கள அரசு, அங்கே சிங்களவர்களைக் குடியமர்த்தியுள்ளது.)

வெற்றிகரமாக முடிவடைந்த இந்த மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பானது தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய வெற்றிக்களிப்பையும் - நம்பிக்கையையும்விட, சிங்கள தேசத்தில் அது ஏற்படுத்திய அதிர்ச்சியும் - ஆத்திரமும் - விரக்தியும் மிக அதிகம் என்பதற்கு, மேற்குறித்த தலைப்புக்களில் பிரசுரிக்கப்பட்ட எழுத்துக்கள் ஒரு சான்றாக அமைந்துள்ளன.

'வெட்கத்துக்குரிய நாள்' என்ற தலைப்பில், 'சண்டே ரைம்ஸ்' வார இதழ் (1. 08. 1993) ஆசிரியர் தலையங்கம் எழுதியுள்ளது. மண்கிண்டி முகாம் தகர்க்கப்பட்ட அன்று கொழும்பில், இந்தியாவுக்கும் சிறீலங்காவுக்கும் இடையில் கிரிக்கட் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதைக் கருத்திற்கொண்டபடி அந்த ஆசிரியர் தலையங்கம் இப்படித் தொடர்கின்றது......

''கடந்த சனிக்கிழமை மட்டுமல்ல, கடந்த வாரம் முழுவதும் உலகெங்குமுள்ள இலட்சக்கணக்கான மக்கள் 'பிந்திய ஓட்ட எண்ணிக்கை என்ன' என்று அங்கலாய்த்தபோது, ஜானகபுரவில் நடந்த பயங்கர இழப்பின் 'எண்ணிக்கை என்ன?' என்று அறிய, 'சண்டே ரைம்ஸ்' சிறப்புக்குழு ஒன்றை அங்கே அனுப்பியது.

...... ஏறக்குறைய 500 பேர் கொண்ட புலிகள் அணி, மின்னல் வேகத்தில், பிரமிக்கத்தக்க நுட்பத்துடன் தாக்கி, ஐந்துகோடி ரூபா பெறுமானமுள்ள ஆயுதங்களை எடுத்துச்சென்றுவிட்டனர்.

...... 'கறுப்பு யூலையை' நினைவுகூர புலிகள் தாக்குதல்களை நடாத்துவார்கள் என்று அபாய எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தும், இந்த முகாமை எப்படிப் புலிகள் சுலபமாகத் தாக்கி அழித்தனர் என்றொரு கேள்வியையும் எழுப்பி, அதற்குப் பின்வருமாறு பதிலும் அளித்துள்ளது.

''அரசியல் உறுதிப்பாடின்மையும், தெளிவற்ற வழிகாட்டல்களும், இராணுவ உயர் தளபதிகள் மத்தியிலுள்ள தனிப்பட்ட அபிலாசைகள் மற்றும் முரண்பாடுகளும், அத்துடன் தேவையான ஆட்பலத்தையும் - அதற்குரிய வளங்களையும் கொடுக்காமல் விட்டதுமான குறைபாடுகள் ஒன்றுசேர்ந்து புலிகளின் வெற்றிக்கு உதவிய அதேவேளை, சிங்களத் தேசத்தின்' வெட்கத்துக்குரிய தேசிய நாளாக' அன்றைய நாளை மாற்றிவிட்டது.

இதேபோன்று, 'விழித்தெழு!' என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்' (1. 08. 1993) ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது.

''நாட்டிற்கு வந்துள்ள ஆபத்தைக் கருத்திலெடுக்காது, சிங்களவர்கள் கிரிக்கட்டில் ஆர்வம் காட்டுகின்றனர்'' என்று சிங்கள மக்களைச் சபித்தபடி தொடங்கும் இந்த சண்டே ஐலண்ட்......

''...... ஈழம் என்ற ஒன்றை தாம்பாளத்தில் வைத்துக்கொடுத்தாலொழிய மற்றெந்தத் தீர்வையும் புலிகள் இயக்கம் ஏற்கமாட்டாது என்பதைத்தான், கடந்த பத்தாண்டுகளில் நடந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் எடுத்துக்காட்டுகின்றன'' என்ற 'கண்டுபிடிப்பைச்' செய்து, புலிகள் இயக்கம்மீதான தனது சீற்றத்தை வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் அரசாங்கத்திற்கு அது சில ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது.

தொகுப்பு: எல்லாளன்

''......இப்போது சனாதிபதியே பாதுகாப்பு அமைச்சின் வேலையையும் செய்கின்றார். சனாதிபதிக்கு வேலைப்பளு அதிகம், எனவே இதை விட்டுவிட்டு சிறீமாவோ பண்டாரநாயக்கா வலியுறுத்தியதுபோல, ''பாதுகாப்பு அமைச்சு என்று ஒன்று உருவாக்கப்பட்டு முழுநேர பாதுகாப்பு அமைச்சராக ஒரு ஆள் நியமிக்கப்படவேண்டும். அதற்கு முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டு அதன்கீழ் ஆயுதப்படைகள் வழிநடாத்தப்படவேண்டும். அதேவேளை இவர்கள் இணைந்து ஒரு புதிய போர்முறைத் திட்டத்தை வரைய வேண்டும்'' ...என்று சொல்லிக்கொடுக்கின்றது.



''புலிகள் பிரமிக்கத்தக்க நுட்பத்துடன் தாக்கி, ஐந்துகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை எடுத்துச் சென்றுவிட்டனர்''.

''......எல்லாவற்றையும்விட முக்கியமானது என்னவெனில் சிங்களத் தேசத்தின் அனைத்து நடவடிக்கைகளும் இந்தப் போர்முயற்சியை நோக்கியதாக வழிநடாத்தப்பட வேண்டும்'' என்று போருக்கு ஆதரவு தெரிவித்து எழுதி முடித்துள்ளது.

இதேபோல யூலை 27 ஆம் திகதிய 'டெயிலி நியூஸ்' நாளிதழ், 'ஜானகபுரவில் பின்னடைவு' என்ற தனது ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றது......

''......வெலிஓயாப் பகுதியில் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட முதலாவது இராணுவ முகாம் இதுதான். ......நன்றாகத் திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட ஒரு தாக்குதல் இது...... இந்த வருடத்தின் மிக மோசமான ஒரு இழப்பு.

..... இந்தப்போர் நிறுத்தமுடியாத ஒரு கட்டத்திற்குச் சென்றுவிட்டது என்பதுடன் புலிகள் இயக்கத்தின் வீரியம் எந்தவகையிலும் குறைந்துவிடவில்லை என்பதையே இந்த முகாம் தகர்ப்பு நிரூபித்துக் காட்டுகின்றது.''

''ஜானகபுரவின் சாம்பலிலிருந்து'' என்ற தலைப்பில் 'சண்டேரைம்ஸ்' ( 1. 08. 1993 ) ஒரு கட்டுரையை எழுதியுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

''......பாறிலியனகே என்ற ஒரு பிரிகேடியரின் தலைமையிலேயே இப்பகுதி (மணலாறு) படைமுகாம்கள் உள்ளன. (இப்போது இவர் மட்டக்களப்புக்கு இடமாற்றப்பட்டுவிட்டார்) இந்தப் பிரிகேடியர் வெலிஓயா இராணுவ முகாமில் தனது தலைமை அலுவலகத்தை வைத்திருக்கின்றார். தாக்குதல் நடந்த அன்று தனது சொந்த ஊரான குருநாகலுக்கு இவர் விடுமுறையில் சென்றிருந்தார். செய்தியைக் கேள்வியுற்று திரும்பிவந்த இவர் இப்பகுதிப் படைமுகாம்களின் பொறுப்பதிகாரிகளை அழைத்துக் கலந்துரையாடி சில தீர்மானங்களை எடுத்தார்.

1. ..... தம்மைத்தாமே பாதுகாக்கக்கூடிய குடியேற்றங்கள் அதிகரிக்கப்படவேண்டும். குறிப்பாக, இன்னுமொரு தாக்குதலின்போது புலிகள் பயன்படுத்தலாம் என்று கருதப்படும் பகுதிகளிலுள்ள குடியேற்றங்கள் ஆயுதமயப்படுத்தப்படவேண்டும்......

2. ......புலிகளால் தாக்கப்படலாம் என்ற அச்சத்தில் இருக்கும் இரண்டு பகுதிகள் இராணுவத்தால் காவல் காக்கப்படும் அதேவேளை, குறைந்தளவு அபாயமுள்ள மூன்றாவது பகுதி வேட்டைத்துப்பாக்கி தாங்கிய சிங்கள ஊர் காவல் படையினரால் காவல்காக்கப்படல் வேண்டும்.

ஆனால் சுற்றிவளைத்து நீண்டு செல்லும் இந்த மூன்றாவது பாதையையே புலிகள் விருப்பத்துடன் தேர்ந்தெடுத்து வெற்றியும் பெற்றுச் சென்றார்கள் என்று, கட்டுரையாளர் அங்கலாய்த்துள்ளார். மேலும் கட்டுரையாளர் இப்படி தொடர்கின்றார்.''...... கடந்த காலத்தில் செய்துவந்ததுபோல பரந்தளவிலான பாரிய இராணுவ நடவடிக்கைகளைவிட சிறப்புப் பயிற்சிபெற்ற அதிரடிப்படையினரையே காட்டு நடவடிக்கைக்கு பயன்படுத்தவேண்டும்......

ஜானகபுரவிற்கு அருகில் உள்ள குடியேற்றத்திலிருந்து புஞ்சிபண்டா என்ற ஆளைப் பிடித்துச்சென்ற புலிகள், கிராமத்தின் உள்ளே அமைந்திருந்த இராணுவத் தங்குமிடங்களுக்குச் செல்ல புஞ்சிபண்டாவையே வழிகாட்டியாகப் பயன்படுத்தினர்.... .''

''எது பிழையாகிப் போனது?'' என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்'டில் ( 01. 08 1993 ) வரையப்பட்ட கட்டுரை இப்படித் தொடர்கின்றது.

சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரதை முழுமையாகவே உலுக்கி எடுத்த துணிகரமான இந்த வெற்றித் தாக்குதலுடன், 83யூலை வன்செயலின் பத்தாவது ஆண்டைப் புலிகள் நினைவுகூர்ந்துள்ளனர்.

1985 இல் ஜானகபுர குடியேற்றம் அமைக்கப்பட்டது. அதற்கு முன் 1984 ஆம் ஆண்டு அப்பகுதியில் இருந்த தமிழர்களை பலவந்தமாக வெளியேற்றிவிட்டு அந்த நிலத்திலேயே ஜானகபுர சிங்களக் குடியேற்றம் அமைக்கப் பட்டது......என தமிழரின் நிலத்தை அபகரித்த செயலை இக்கட்டுரை ஆசிரியர் பச்சையாக ஒப்புக்கொள்கின்றார்.

...... ஒவ்வொரு யூலை மாதமும் இரத்தக் களரி நிறைந்ததாகவே இருக்கின்றது என, அதிகாரிகள் கூறுகின்றனர்.

1. 1990 யூலை கொக்காவில் முகாம் அழிப்பு.
2. 1991 யூலை ஆனையிறவுச் சமர்.
3. 1992 யூலை 19 அதிகாரிகளுடன் வை-8 சுட்டு வீழ்த்தப்பட்டது.
4. 1993 யூலை 70இற்கு மேற்பட்ட படை பலி.

இந்த முகாமை புலிகள் ஏன் தாக்கி அழிக்கத் தீர்மானித்தார்கள் என்ற கேள்விக்கு இக்கட்டுரையாளர் இப்படிப் பதில் கூறுகின்றார்.....

''...... ஜானகபுர இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினர் C.L.I.(Ceylon Light Infantry) எனப்படும் படைப்பிரிவைச் சேர்ந்தோராகும். இந்த C.L.I படைப்பிரிவைச் சேர்ந்தவர்களில்

(12ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# மண்கிண்டி மலையில்...

பதின்மூன்று பேர்தான் 1983 திருநெல்வேலியில் கொல்லப்பட்ட இராணுவத்தினராகும், எனவே அதை நினைவுகூர, அதே படைப்பிரிவு மீது தாக்க புலிகள் தீர்மானித்திருக்கலாம்'' என கட்டுரையாளர் எழுதுகின்றார்.

'ஜானகபுராவின் அவலம்' என்று பொருள் கொள்ளக்கூடிய ஒரு தலைப்பில் 'சண்டே ரைம்ஸ்' இல் வெளிவந்த முகாம் தகர்ப்புக் கட்டுரை, ஒரு மர்மக்கதை போலத் தொடங்குகின்றது .....

மணிக்கூட்டின் இரண்டு கைகளும் பன்னிரண்டில் நின்றபொழுது, காவல் கடமை முடிந்த சிப்பாயகள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள். அது யூலை 25 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை. காவல் கடமையில் இருந்தவர்கள் தமது துப்பாக்கியை இறுகப்பற்றியபடி, தமது காவல் அரண்களிலிருந்து இருளை ஊடறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். சிலிர்ப்பூட்டும் காற்று மரக்கிளைகளைத் தடவிச் செல்லும் அந்தச் சத்தம் மட்டும்தான், அங்கிருந்த அமைதியைக் குலைத்துச் சலசலத்தது.

திடீரென, ஆர். பி.ஜி. மோட்டார்கள் ஏவப்படும் சத்தம் கேட்டது.

ஜானகபுரவிற்கு அருகில் இருந்த கொக்குத்தொடுவாய், மற்றும் கோவில் பொயின்ற் முகாம்கள் ஒரே சமயத்தில் தாக்கப்பட்டன. ஜானகபுரவிலிருந்து தமக்கு உதவிவரும் என, இவர்கள் எதிர்பார்த்துள்ளனர். ஆனால், ஜானகபுரவின் தொலைத்தொடர்பு வேலை செய்யவில்லை.

இதேவேளை, 12கி.மீ. அப்பாலிருந்த கஜபாகுபுர முகாமுக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அதுவும் ஜானகபுரவுடன் தொடர்பு கொண்டது; பதில் இல்லை ஆனாலும் உடனடியாகவே கொக்குத்தொடுவாய்க்கும், கோவில்பொயின்றுக்கும் உதவிப்படைகள் அனுப்பப்பட்டன.

ஜானகபுர முகாம், கப். லசந்தா பெரெரா என்ற இராணுவ அதிகாரியின் பொறுப்பில் இருந்தது. சண்டை உக்கிரம் அடைந்தபொழுது இந்தப் பொறுப்பதிகாரி உட்பட மொத்தம் பதின்னான்கு சிப்பாய்கள் மட்டுமே உயிர் தப்பி ஓடினர்.

அதில் ஒருவர், தாக்குதலின் ஆரம்பக்கட்டத்தை இப்படி விபரிக்கின்றார்......


"ஆர்.பி.ஜிகள் அடிக்கப்படும் சத்தம் எங்களுக்குக் கேட்டது. அடுத்த கணம் பெருந்தொகையான புலிகள், முகாமின் உள்ளே காணப்பட்டார்கள்.''

இன்னொரு சிப்பாய், இப்படிச் சொல்கின்றார் ......



புலிகளால் தகர்க்கப்பட்டபின் முகாமினுள் இராணுவம் நுழைகிறது

''அரசு தமக்குப் பாதுகாப்பு வழங்கவில்லை என குடியேற்றவாசிகள் குற்றம் சாட்டுகின்றனர். தனது முகாமையே பாதுகாக்க முடியாத இந்த அவலமான கட்டத்துக்கு இராணுவம் எப்படிப் போனது''?



தளபதிகள் பால்ராஜ், சொர்ணம் ஆகியோருடன் புலிகள்

''...இந்தப்போர் நிறுத்தமுடியாத ஒரு கட்டத்திற்குச் சென்றுவிட்டது என்பதுடன் புலிகள் இயக்கத்தின் வீரியம் எந்தவகையிலும் குறைந்துவிடவில்லை என்பதையே இந்த முகாம் தகர்ப்பு நிரூபித்துக் காட்டுகின்றது.''

''நாங்கள் முற்றுமுழுதாகவே ஆச்சரியத்தில் மூழ்கிப்போனோம். ஆர்.பி.ஜி ஏவப்படும் சத்தங்கள் கேட்டபோது, முன்னணிக் காவல் அரண்களில் உள்ள சிப்பாய்கள் பதில் தாக்குதலைத் தொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் எமது முகாமில் இருந்த ஒரு பலவீனமான பாதைவழியே புலிகள் முகாமினுள் நுழைந்து, எங்களைத் திணறடித்துவிட்டார்கள். அதன்பின்

எமது கூடாரங்களுக்குள்ளேயே துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத்தொடங்கின. அப்போது எங்களுடைய சகாக்கள் எல்லாப்பக்கத்தாலும் ஓடிக்கொண்டிருந்தனர்; சிலர் புலிகளால் வேட்டையாடப்பட்டார்கள்.''

இன்னுமொரு இராணுவச் சிப்பாய் தெரிவித்தார் .....

''ஜானகபுரவிலிருந்து பதுங்கித் தாக்குதலுக்கென எங்கோ புறப்பட்ட இராணுவத்தின் ஒரு சிறு அணி, இடையில் ஜானகபுரவைத் தாக்கச் சென்ற புலிகளின் அணியைக் கண்டதாம். ஆனால் புலிகளின் அந்த அணி ஆட்தொகையில் அதிகமாக இருந்ததாலும் அவர்களிடம் பாரிய ஆயுதங்கள் இருந்ததாலும் நாம் தாக்கவில்லை; மௌனமாக இருந்துவிட்டோம்'' எனக் கூறினார்.

இந்தத் தாக்குதலின் உடனடி விளைவாக, முழுக் குடியேற்றவாசிகளும் வெளியேறினர். இவர்களைச் சந்தித்து நிலைமையை அறிவதற்காக, அரசாங்கம் ஒரு குழுவை அனுப்பியிருந்தது. ஜெனரல் வணசிங்கா, லெப். ஜெனரல் சிசில் வைத்தியரட்ண, புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரத்ன, மகாவலி அமைச்சர் காமினி அத்துக்கோறளை ஆகியோர் அதில் அடங்கியிருந்தனர்.

''......அரசு எமக்குப் போதிய பாதுகாப்பை வழங்கவில்லை'' என. இந்தப் அரச பிரதிநிதிகள் முன்னிலையில் குடியேற்றவாசிகள் அரசைக் குற்றம் சாட்டினர். அதேவேளை, ''குடியேற்றவாசிகள் போதுமான அளவுக்கு படையினருடன் ஒத்துழைக்கவில்லை'' என்று, ஒரு பிரிகேடியர் கோபத்துடன் கூறினார்.

'......தனது முகாமையே பாதுகாக்க முடியாத இந்த அவலமான கட்டத்துக்கு இராணுவம் எப்படி வந்தது?' என்றொரு கேள்வியை எழுப்பிய இக்கட்டுரையாளர், கொக்காவில், மாங்குளம், கொண்டச்சி, வெற்றிலைக்கேணி, ஜானகபுர என்று பல உதாரணங்களை வடபகுதியில் நிகழும் போர் காட்டியுள்ளது எனப் பெருமூச்சு விட்டுள்ளார்.

......இராணுவரீதியாகப் பலவீனமான நிலையிலும், நிதி விடயத்திலும் படுமோசமான கட்டத்திலும் புலிகள் இயக்கம் இருப்பதாக கொழும்பில் செய்யப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையிலேயே, கைதிகளின் விடுதலை விடயத்தையும் அரசு பிழையாகக் கையாண்டுவிட்டது என்று, சிங்களத் தேசத்தை நொந்தும் கொள்கின்றார்.

08 - 08- 1993ஆம் திகதிய 'சண்டே ரைம்ஸ்' தனது தலைப்புச் செய்தியில், ஜானகபுர முகாம் தாக்கப்படமுன்னரே, புலிகள் அதை நன்றாக வேவு பார்த்துவிட்டார்கள் என்று எழுதியுள்ளது.

''...... சிறு வியாபாரிகள்போல நடித்த புலிகளின் வேவு வீரர்கள், தாக்குதல் நடைபெறச் சில வாரங்கள் இருக்கும்போதே ஜானகபுரவிற்கு விஜயம் செய்து தகவல்களைச் சேகரித்தனர். இதன்மூலம்தான், முகாமினுள் நுழைந்தவுடனேயே தொலைத்தொடர்பு சாதனங்கள் இருக்கும் இடத்தை உடனடியாகவே அடைந்து, மற்றைய முகாம்களுடனான தொடர்புகளைத் துண்டித்து வெற்றிக்கு வழிசமைத்தார்கள்......'' என்று அது எழுதியுள்ளது.

இதேபோன்றுதான், ''வேட்டைக்காரர்கள் வேட்டையாடப்பட்டுவிட்டார்கள்'' என்ற தலைப்பில் 'சண்டே ஐலண்ட்' (1. 08. 1993) வெளியிட்ட உருவகப் பாணியிலான ஒரு கட்டுரையில் ''...... படையினர் எங்கெங்கே நித்திரை கொள்கின்றனர் - மற்றும் அவர்களின் முக்கிய தங்குமிடங்களையும், புலிகளின் வேவு வீரர்கள் முன்னரே கண்டறிந்து சென்றனர்......'' என்று கூறப்பட்டுள்ளது.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சி தொடர்பாகப் புலிகளின் இராணுவ வல்லமையையும் படையினரின் இயலாமையையும் இந்தப்பத்திரிகைகள் பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தாலும், போரை நிறுத்தி அரசியற் தீர்வு காணுமாறு இந்தப் பத்திரிகைகள் அரசுக்குப் புத்திமதி சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, புதிய தந்திரோபாயங்கள் – போர்முறைத் திட்டங்களுடன் போரை முழுமூச்சுடன் நடத்த வேண்டும் என்றே, வலியுறுத்திக் கூறியுள்ளன. அரசியல்வாதிகள் – இராணுவத் தளபதிகள் மட்டுமல்ல, சிங்கள இனத்தின் பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் என்று ஒட்டுமொத்தமாக சிங்கள தேசம், தமிழரின் இனப் பிரச்சினைக்கு போர் மூலம்தான் தீர்வு காணவேண்டும் என்று, சாதாரண சிங்கள மக்களுக்குப் போர் வெறி ஊட்டி வருவதையே காணமுடிகின்றது.

சிங்கள தேசத்தின் இப்போர் வெறியை, சர்வதேச சமூகம் இப்போது மெல்ல மெல்லப் புரிந்துவருகின்றது. ◯

# பத்தாண்டு போர்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களப்படைகள் மேற்கொண்டன. எனினும் புலிகளை நசுக்கவோ, போராட்டத்தை ஒடுக்கவோ முடியவில்லை.

ஆனாலும் தொடர்ந்தும் போர்மூலமே தமிழினத்தை அழிக்க, சிங்கள அரசு உறுதிபூண்டது. இதன்பொருட்டு தனது படைபலத்தைப் பன்மடங்கு பெருக்கி - நவீனப்படுத்தியது. இதற்குரிய பணத்தை, அபிவிருத்தி மற்றும் உதவிகள் என்ற பெயரில் மேலைநாடுகளிடம் இருந்து பெற்றுக்கொண்டது.

இப் பத்தாண்டுப் போரின் தொடக்க ஆண்டான 1983 இல் சிறீலங்கா அரசு, 184 கோடி ரூபாய்களை படைத்துறைக்கெனச் செலவிட்டது. ஆனால் 1993 இல் இத்தொகை பத்துமடங்கை விட அதிகமாக - அதாவது 2000 கோடி ரூபாவாக - அதிகரித்தது. அதே வேளை, சிங்களப் படையின் ஆட்பலமும் இப்பத்தாண்டின் முடிவில், சுமார் பத்துமடங்காக அதிகரித்தது. 1983 ஆம்ஆண்டு 15,000 ஆட்களைக்கொண்டுவிளங்கிய சிங்களப்படை, 1993 இல் 1,60,000 இற்கு மேல் சென்றுவிட்டதாக, அரசின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

போர்ச்செலவில் பத்துமடங்கும் அதேபோல ஆட்பலத்தில் பத்து மடங்கும் சிங்கள தேசத்தின் தரப்பில் அதிகரித்திருந்தும், இப்பத்தாண்டுப் போரின் முடிவில் புலிகள் இயக்கமும் - தமிழீழ விடுதலைப் போராட்டமும் எந்த நிலையில் இருக்கின்றன?

ஆயுதப் போராட்டத்தின்மூலம் சிங்களப் படையை எமது மண்ணிலிருந்து விரட்டி, தமிழீழ அரசை நிறுவிவிடமுடியும் என, பத்தாண்டுப் போரின் ஆரம்பத்தில் பெரும்பாலான மக்கள் நம்பியிருக்கவில்லை, ஆனால் இதன் முடிவில் பெரும்பாலான மக்களிடம் அவ்வாறானதொரு நம்பிக்கை அசைக்கமுடியாத அளவுக்குக் குடிகொண்டுவிட்டது. இப்பத்தாண்டுப் போரில் தமிழர் தரப்பில் நிகழ்ந்த முக்கிய விளைவாக இந்த மனமாற்றத்தைக் கூறலாம். இதற்குக் காரணம், பிரபாகரன் என்ற பெருந்தலைவனின் தலைமையின் கீழ் புலிகள் இயக்கம், போர்க்களத்திலும் மக்கள் அரங்கிலும் புரிந்த அற்புத புலிகள் சாதனைகளேயாகும்.


தமிழினத்தை அழிக்க சிங்கள அரசு திட்டமிட்டுச் செய்யும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் வேகத்துடனும், துணிச்சலுடனும், விவேகத்துடனும் பதில் நடவடிக்கை எடுத்து, சிங்களப் பேரினவாதத்தின் நாசகாரத் திட்டங்களைப் தடுத்துவருகின்றனர்.

படைபலம்கொண்டு தமிழீழத்தை அழிக்க முனையும் சிங்கள அரசை, படைபலம்கொண்டு தான் தடுக்க முடியும் என்ற நடைமுறை உண்மையை அடிப்படையாகக்கொண்டு, தமிழர் படையைக் கட்டியெழுப்பும் முயற்சியில், இப்பத்தாண்டுக்குள் புலிகள் இயக்கம் பெரும் வெற்றி பெற்றுவிட்டது என்றே கூறலாம். 1983 இல் சில பத்துப் பேர்களைக்கொண்டிருந்த புலிகள் இயக்கம், இன்று பல்லாயிரமாகப் பெருகி, ஒரு நாட்டின் படையைப்போல மாறிவிட்டது என்பதை, உலகமே ஒப்புக்கொள்கின்றது.

தரைப்படை, கடற்படை என்று படைத்துறைரீதியாக மட்டுமல்ல, விடுவிக்கப்பட்ட பகுதிகளில் சட்டம் - ஒழுங்கைப் பேணி சிவில் நிருவாகத்தை வழிநடாத்தும் வகையில் தமிழீழ காவல்துறை, தமிழீழ நீதி - நிருவாகத்துறை என்று ஒரு அரசுக்கு இருக்கவேண்டிய பல அலகுகளை உருவாக்கி, அவற்றை மேலும் வளர்த்தபடி புலிகள் இயக்கம் முன்னேறிவருகின்றது; தமிழீழ விடுதலைப் போராட்டம் உறுதியும் - வேகமும் பெற்று வளர்ந்து வருகின்றது.

1977 ஆம் ஆண்டு, கூப்பிய கரங்களுடன் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்த தமிழினத்தைப் பார்த்து, "போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்" என்று, சிங்கள தேசத்தின் அன்றைய சனாதிபதி ஜே. ஆர். முழங்கினார். 16 வருடங்களின்பின் இப்போது, அதேவார்த்தைகளை அதே அரசிற்கெதிராக அச்சமின்றித் தமிழினமும் முழங்கும் சக்தியுடன் இருக்கின்றது. இந்த மகாசக்தியை, பிரபாகரன் என்ற பெருந்தலைவன் தமிழினத்திற்குப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார். ○

## மண்கிண்டிமலை இராணுவ முகாமின் மாதிரி அமைப்பு




'இதயபூமி - 1' இராணுவ நடவடிக்கையின் இலக்காக இருந்த மண்கிண்டிமலை முகாம் பகுதியை, இந்த மாதிரி வரைபடத்தில் காணலாம்.

பிரதான முகாம், குடியேற்றவாசிகளுக்கு மத்தியிலிருந்த மினிமுகாம், அவதானிப்பு நிலைய முகாம் (மலை) ஆகிய மூன்று முகாம்களும் தாக்கி அழிக்கப்பட்டு, சுமார் ஏழு கி. மீ. பகுதி புலிவீரர்களினால் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதான முகாமைச் சூழ நான்கு தடுப்புகளை இராணுவத்தினர் இட்டிருந்தனர். முகாமைச் சூழ கம்பிச் சுருள்களாலான ஒரு தடுப்பும், அதற்குள்ளே உயரமான கம்பிவேலியும், அதற்கும் உள்ளே, சில மீற்றர்கள் தள்ளி, இன்னுமொரு கம்பிவேலியும், அதற்கும் உள்ளே, சில மீற்றர்கள்தள்ளி நான்கு- ஐந்து அடி உயரமுள்ள மண் அணையும் போடப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் தாண்டியே இப் பிரதான முகாமைப் புலிவீரர்கள் கைப்பற்றினர்.

அதேவேளை, இந்தப்பிரதான முகாமிலிருந்து சுமார் 500 மீற்றர் தொலைவிலிருந்த ஒரு சிறு மலையை (183 அடி), அவதானிப்பு நிலையமாக இராணுவத்தினர் பயன்படுத்தினர். உயரமான இடத்திலிருந்த அந்த அவதானிப்பு நிலைய முகாமானது, பிரதான முகாமின் சுற்றுச்சூழலை இலகுவாகக் கண்காணிக்கக்கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. இதுவும் புலிவீரர்களினால் கைப்பற்றப்பட்டு, பின் அழிக்கப்பட்டது.

அதேவேளை, பிரதான முகாமிலிருந்து சற்றுத்தள்ளி அமைக்கப்பட்டிருந்த சிங்களக் குடியேற்றப்பகுதிக்குள், இருந்த ஒரு மினிமுகாமும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டது.

இந்த மூன்று முகாம்களையும் உள்ளடக்கிய மண்கிண்டிமலை முகாம் தனித்திருக்கவில்லை. ஒரு பக்கத்தில் கோட்டைக்கேணி முகாமையும் மறுபக்கத்தில் முந்திரிகைக்குள முகாமையும்கொண்டு பலமாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய பலம்வாய்ந்த ஒரு முகாமைக் கைப்பற்றியே புலிவீரர்கள் ஒரு வீரசாதனையை நிலைநாட்டினர்! ○

www.eelamview.com

# சிறீலங்கா தொடுத்த இரண்டாம் போர்

சிறீலங்காவுடன் மீண்டும் போர் வெடித்து மூன்று ஆண்டுகள் முடிந்துவிட்டன. 10 06.90 இல் மீண்டும் போர் வெடித்தமைக்கான காரணங்கள் பலவற்றைச் சுட்டிக் காட்டுவதே, இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிங்கள, தமிழ் மக்களிடையே இயல்பாக உள்ள நம்பிக்கையின்மை, இணக்கம் காணப்பட்ட விடயங்களை செயல்படுத்தத் தவறியமை, குடியேற்றம், படையம்-காவல்துறையினரின் அத்துமீறல்கள், முஸ்லிம் கொங்கிரசினதும் முஸ்லிம்களினதும் செயற்பாடுகள் ஆகிய பல காரணங்களோடு, விடுதலைப் புலிகளின் தனித்தன்மையை -முதன்மையைக் குறைக்க நடந்த முயற்சிகளும் இக்காரணங்களுள் அடங்கும்.

02 01·89 அன்று பிரேமதாசா சனாதிபதியாகப் பதவியேற்றபோது, இலங்கைத் தீவில் தமிழீழப் பகுதி அவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவில்லை.

தென் இலங்கையில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே வி பி.) சிங்கள ஆட்சிக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

இந்தியப்படை இலங்கையில் இருக்கும் வரை, தான் இலங்கைக்கு பெயரளவில் மட்டுமே சனாதிபதி என்பதை பிரேமதாசா உணர்ந்திருந்தார். அத்துடன் இந்தியப் படையை இங்கு நீண்டகாலம் இருக்கவிட்டால், இலங்கை இந்திய ஆதிக்கத்திற்குள் நிரந்தரமாகச் சென்றுவிடும் என்பதையும் உணர்ந்தார். தனது ஆட்சிக்கு அவர்களால் பெரும் ஆபத்து உண்டு என்பதையும் உணர்ந்திருந்தார்.

இந்தியப்படையை முதலில் திருப்பி அனுப்ப வேண்டுமாயின் ஜனதா விமுக்தி பெரமுனவுடனும், தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் ஏதாவது இணக்கத்திற்கு வரவேண்டும் என எண்ணியதின் விளைவாக, இருவரையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

13.04 89இல்சிறீலங்கா அரசு உத்தியோகபூர்வமாக விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது நாங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து 04 05.89 அன்று, முதன் முதலாக சனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்தோம். அதைத் தொடர்ந்து ஆரம்பமான பேச்சுவார்த்தை, 10.06.90 அன்று முறிவடையும் வரை தொடர்ந்தது

பேச்சுவார்த்தையின்போது பொதுவான சில விடயங்களில் இணக்கம் காணப்பட்டது.

1) மாகாணசபையை இடைக்காலத் தீர்வாக ஏற்று மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது; அதில் வெற்றி பெறுபவர்களோடு நிரந்தரத் தீர்வுத்திட்டம் பற்றிப் பேசுவது.

2) இருக்கும் மாகாணசபையைக் கலைப்பது; ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்குவது.

3) தமிழீழத்தில் சிங்களவர் வாழும் பகுதி தவிர்ந்த மற்றையப் பகுதிகளில், காவல் துறைக்கு தமிழ்பேசும் மக்களை மட்டும் நியமிப்பது

4) குடியேற்றத்தை முழுமையாக நிறுத்துவது

5) படையம் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. தமிழ் பேசும் காவல்துறையினர் போதிய அளவில் சேர்க்கப்படும் வரை, புதிதாக காவல் துறை நிலையங்கள் திறக்கப்படல் கூடாது.

மாகாணசபையானது, மீண்டும் தமிழீழ - சிறீலங்காப் போர் தொடங்கும்வரை கலைக்கப்படவில்லை. 01.03.90 இல் இருந்து வட - கிழக்கு மாகாணசபையானது, ஈழ சனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாகச் செயல்படும் என வட கிழக்கு மாகாணசபை பிரகடனப்படுத்தியது. அப்படி அது பிரகடனப்படுத்திய பின்புங்கூட அதைக் கலைக்க சிறீலங்கா அரசு முயலாமல், ஏன் கலைப்பது கடினம் என காரணங்களைத் தேடிக்கொண்டிருந்தது - போர் வெடித்தபின், வட-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது எல்லோரும் அறிந்த விடயமாகும்.

ஆறாவது சட்டத்திருத்தம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறப்பட்டபோதும், அது குறித்து எதுவும் செய்யப்படவில்லை. 05.04.90 அன்று நாடாளுமன்றத்தில் பேசிய, சூழல் காப்பு நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் திரு. வின்சென்ற் பெரேரா, ஆறாவது சட்டத் திருத்தம் குறித்து இன்னும் முடிவு இல்லை என அறிவித்தார் (தினபதி- 06.04.90). அதை நீக்க முயற்சி எடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, இச்சிக்கல்கள் குறித்து சிங்கள மக்களுக்குச் சரியான விழிப்புணர்வைத்தரும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவுமில்லை.

1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்திற்குக் காரணமான சிங்கள சிறீ எழுத்து, ஒரு சாத்திரக்காரன் கூறினான் என்பதற்காக, இரவோடு இரவாக 01.01.90 இல் இருந்து வாகனங்களிலிருந்து எடுக்கப்பட்டதை, இங்கு சுட்டிக்காட்டுதல் அவசியமாகும். ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் எனக் கூறலாம் அதை அரசு பெற வாய்ப்பிருந்தது. அப்படிப் பெறமுடியாமல் போனாலும் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து அது தோற்கடிக்கப்படுவதையே விரும்புகிறோம் என்றும், அதன்மூலம் பலரை அம்பலப்படுத்தலாம் எனவும் கூறியிருந்தோம் என்பதையும், இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படும் என பலதடவைகள் கூறப்பட்டபோதும்,அவை நிறுத்தப்படவில்லை. போர்ச்சூழல் காரணமாக வெளியேறியவர்கள் திரும்ப வருகின்றார்கள் எனக் கூறிக்கொண்டு, பெருமளவில் சிங்கள மக்களை அழைத்துவந்து குடியேற்றங்கள் செய்யும் முயற்சி தொடர்ந்தது இது குறித்து பலதடவைகள் நேரடியாகச் சனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோதும், எமக்குத் தந்த வாக்குறுதி காக்கப்படவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேசுவதால் மட்டுமே இச்சிக்கலைத் தீர்க்கமுடியும் என்பது, சிறீலங்கா அரசுக்குத் தெரியும். எம்மோடு அரசு பேசிய காலத்தில், மற்றைய குழுக்கள் எல்லாம் இந்திய அரசின் கூலிப்பட்டாளங்களாகச் செயல்படுகின்றன என்பதும், சிங்கள அரசுக்குத் தெரியும்.

எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தபோது நாம் பலவீனமான நிலையில் இருப்போம்என அரசு எதிர்பார்த்தது. தான் விரும்பியவண்ணம் எம்மைக் கையாளலாம் எனவும் சிங்கள அரசு எண்ணியது நடைமுறையில் நாம் பலவீனமாக இல்லை என்பதை அறிந்துகொண்டது தாம் இதுவரை சந்தித்த தமிழ் அரசியல்வாதிகளுக்கும் கூலிப்படைகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும உள்ள வேறுபாடுகளையும் புரிந்துகொண்டது.

**யோகி**

எங்களுக்குத் தரும் முதன்மையைக் குறைக்க விரும்பியது. எம்மோடு நேரடியாகப் பேசுவதில் இருந்து தப்பமுயன்றது. இதன்மூலம் இனச்சிக்கலுக்கான தீர்வைக்காண்பதில் இருந்து விலக முயன்றது. வழமையான சதுரங்க ஆட்டம்தான். ஆனால் இம்முறை சிங்கள அரசுக்கு எதிராக ஆடியவர்கள் பாண்டவர்கள் இல்லை என்பதை அரசு புரிந்து கொள்ள, நீண்டகாலம் எடுக்கவில்லை.

இந்தியப்படையை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை நிறுத்தும்படி,சிறீலங்கா அரசு 28 6.89 அன்று உத்தியோகபூர்வமாகக் கேட்டபோதும், இந்திய அரசு 20 . 9. 89 வரை தாக்குதலை நிறுத்த இணங்கவில்லை. நாம் முன்பு கூறியதுபோல் இலங்கை சனாதிபதியின் கட்டுப்பாட்டுக்குள் இந்தியப் படையோ, தமிழீழமோ இருக்கவில்லை என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டும்.

இந்தியப்படை 20.9 89இல் விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தாக்குதலை நிறுத்தும் என்பதையும், 15.10 89 இல் அம்பாறையிலிருந்து வெளியேறத் தொடங்கும் என்பதையும் ஓரளவு உறுதி செய்துகொண்ட சிங்கள அரசு, தனது அடுத்தகட்ட நகர்வை நகர்த்தியது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்து வரும் முதன்மை நிலையைக் குறைப்பதே, அந்நகர்வாகும்.

8. 9. 89 அன்று, இத்தீவில் உள்ள பல சிக்கல்களைத் தீர்க்க, குறிப்பாக இனச்சிக்கலைத் தீர்க்க 13. 9. 89 இல் இருந்து சர்வகட்சி மாநாடு ஒன்று கூட்டப்படும் என அறிவித்தது. அறிவித்தது மட்டுமல்லாமல் எம்மையும் கலந்துகொள்ளும்படி வற்புறுத்தியது. இவர்கள் நோக்கத்தைப் புரிந்துகொண்ட நாங்கள் அதில் பார்வையாளர்களாக மட்டும் கலந்துகொண்டோம்.

இந்தியப்படை வெளியேறிய பின், தமிழீழப் பகுதியில் எமக்கும் மற்றைய குழுக்களுக்கும் இடையே பெரும் மோதல் வெடிக்கும்; அதைத் தடுக்க ஒரு சமாதானக் குழு அமைக்கவேண்டும் என அரசு கூறியது அக்குழுவில், மோதலில் ஈடுபடலாம்எனக் கணிக்கப்பட்டோர் அல்லாதோரும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இறுதியாக, எல்லாக் கட்சிகளில் இருந்தும் மூவர் வீதம் கிட்டத்தட்ட 54 பேர் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டது.

54 பேருக்குள், தமிழீழத்தில் இந்தியப் படையை வெளியேற்ற முழுத் தற்கொடையும் செய்த புலிகளின் சார்பில், மூவர் கலந்துகொள்வர். மிகத்திறமையான நகர்வு. 9. 10. 89 இல் கூடவிருந்த சமாதானக் குழுவில் நாம்கலந்துகொள்ள மறுத்துவிட்டோம்.

இதேவேளை, 22. 2. 90 அன்று ரஞ்சன் விஜேரத்தினா செய்தியாளர் மாநாட்டில் (வீரகேசரி - 23 . 2. 90) இந்த நாட்டை ஆயுதங்கள் எதுவுமற்ற நாடாக மாற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எனவே, மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் வட-கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும் சட்டவிரோத ஆயுதங்களை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றுவர். இந்த முடிவு குறித்து விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் எனக் கூறியிருந்தமை, குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படி அவர்கூறியபோது. வட - கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில், சட்டத்திற்குப் புறம்பாக ஆயுதங்கள் வைத்திருப்பவர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டும் அழிக்கப்பட்டுக் கொண்டும் இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இவ்வறிவித்தல் எதிர்காலத்தில் அரசாங்கம் என்ன செய்ய எண்ணியுள்ளது என்பதை எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

இந்தியப்படை வெளியேறியபின் இந்தியக் கூலிப்பட்டாளமான தமிழ்த் தேசியப் படையின் கை ஓங்கக்கூடாது என்பதில், அரசாங்கம் அக்கறையாக இருந்தது. அதன் கை ஓங்கல் என்பது மறைமுகமாக இந்திய அரசின் ஆட்சி இங்கு தொடர வழிவகுக்கும் என்று, சிறீலங்கா அரசுக்குத் தெரியும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த் தேசியப் படைக்கும் இடையே மோதல் தவிர்க்க முடியாத ஒன்று என்றும், இம் மோதலால் விடுதலைப் புலிகளின் பலம் பெருமளவில் இழக்கப்படும் என்றும் சிறீலங்கா அரசு கணிப்பிட்டது.

அதன்பின் வட - கிழக்கில் ஆயுதக்களைவு என்ற பெயரில் விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையலாம் என சிறீலங்கா அரசு எண்ணியிருந்தது. இது மீண்டும் சிறீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதலை உருவாக்கும் என்பது, சிறீலங்கா அரசுக்கு நன்கு தெரியும்.

சிறீலங்கா அரசு எம்முடன் நேரடியாகவும், எல்லோருடனும் சர்வகட்சி மாநாடு என்றும் நாடகம் ஆடிக்கொண்டிருந்த வேளையில், மறைமுகமாக ஈ. பி. ஆர். எல். எவ். உடனும் மற்றைய இந்திய சார்புக் குழுக்களுடனும் தொடர்பை வைத்திருந்தது. பிரேமதாசாவுக்கு எப்போதுமே இரண்டு முகங்கள் உண்டு. ஒன்று அன்னபப் போதிக்கும்; மற்றையது அழிவுக்குத் தலைமை தாங்கும்

பேச்சுவார்த்தையின்போதும் அமைதியான முகமான ஹமீத் எம்முடனும் சர்வகட்சிகளுடனும் பேச, அழிவு முகமான ரஞ்சன் விஜேரத்தினா, ஈ. பி. ஆர். எல் எவ். உடன் பேச்சுவார்த்தை நடத்திவந்தார். அவர் அவர்களோடு பேசியது மட்டுமல்ல, அக்குழுவில் உள்ளோரை எமக்கு எதிராக எப்படிப் பயன்படுத்தலாம் என்பது குறித்துப் பேசியும், அதற்குச் செயல்வடிவம் கொடுத்தும் வந்தார்.

இதுபற்றிப் பலமுறை நாம் சனாதிபதியிடம் கூறி எம் திருப்தியின்மையைத் தெரிவித்த போதும், அவை கருத்தில் கொள்ளப்படவில்லை. எம் கூற்றை அன்று ஏற்க மறுத்த பலர், இன்று நேரடியாக அதைக் காண்கின்றபோது காலம் கடந்து எம்கருத்தை ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை.

15· 05. 90 இல் ஈ. பி. ஆர். எல். எவ். உடன் அரசு பகிரங்கமாகப் பேச முன்வந்தது. அரசு தரப்பில் ரஞ்சனும், பிரட்மன் வீரக்கோனும் பேசினர். ஹமீத் அவர்கள் எமது அழுத்தம் காரணமாக அதில் கலந்துகொள்ளவில்லை.

நாம் இதைத் தொடர்ந்து, சர்வகட்சி மாநாட்டில் பார்வையாளர்களாகக் கலந்துகொள்வதில் இருந்து விலகினோம்.

எம்மோடு பேசிக்கொண்டு எம்மைச் சர்வகட்சி மாநாடு, சமாதானக்குழு என இழுத்து எம் முதன்மையைக் குறைக்கும் செயலிலீடுபட்ட அரசு, ஈ. பி. ஆர். எல். எவ். உடன் தனியாகப் பேச முயன்றது. இது அவர்களின் உண்மையற்ற போக்கையே காட்டியது.

மாகாணசபையில் ஈ. பி. ஆர். எல். எவ், இருந்தபோது, இணங்கியிருந்த அதிகாரப் பரவலாக்கங்களையே செயற்படுத்த மறுத்த அரசு, தற்போது அவர்களுடன் பேசி இனச்சிக்கலைத் தீர்க்கப்போவதாக நடித்தது. மாகாணசபை முதலமைச்சருக்கு இருக்கக் கதிரைகூட இல்லை

(15ஆம் பக்கம் பார்க்க)

www.eelamview.com